பக்கங்கள் பத்து
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 16 சனிக்கிழமை (01-09-2001) தொலைபேசி: 3378 ஒலி: 264

## தகுதிகாண் அரசு அமைக்க இறுதி முயற்சி

# அரசு - ஜே. வி. பி. 3 சுற்றுப் பேச்சு

# நேற்று நள்ளிரவுவரை நீடித்தது!

### முடிவுகள் முழுமையாக வெளிவரவில்லை

(நமது விசேட நிருபர்)

தகுதிகாண் அரசாங்கம் அமைப்பது தொடர்பாக ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசிற்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே. வி. பி) இடையில் நேற்றுப் பிற்பகல் 3 மணிதொடக்கம் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருந்தபோதும், முடிவுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் தொடர்ந்தும் பேச்சு வார்த்தை நடைபெறுகிறது.

நாட்டின் தற்போதையஅர சியல் நெருக்கடி நிலைக்கு முடிவு கட்டி அபிவிருத்திப்பா தையில் நாட்டை இட்டுச் செல்லும் நோக்குடன் நேற்று மாலை 3மணி முதல் நள்ளி ரவு வரை அரசாங்கத்திற்கும் ஜே.வி.பிக்குமிடையே மூன்று சுற்றுப் பேச்சுக்கள் இடம் பெற்றது.

ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற இப்பேச்சு வார்த்தையின் போது அர சாங்கத்தின் சார்பில் ஜனா திபதி சந்திரிகா குமாரதுங்கா பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா, மங்கள சமரவீர, நிமால் சிறிபாலடிசில்வா ஆகி யோரும் ஜே. வி. பியின் சார்பில் அதன் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஐந்து ஆணைக்குழுக்கள் அமைத்தல், பாராளுமன்றத் தைக் கூட்டி அதனை ஒத்தி வைக்காமல்தொடர்ந்துநடத் துதல், சர்வஜன வாக்கெடுப்

→10ஆம் பக்கம் பார்க்க

### பாதுகாப்பு செலவுக்கு 5கோடி அமெ.டொலர்

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்புத் தேவைக்கென 5கோடிஅமெ ரிக்க டொலரை ஒதுக்கு வதற்குநேற்றுக்கூடிய அமைச் சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது.

இதேவேளை நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தீவிரமடைந்துவரும் அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தல் ஒன்றை நடத்தி நாட்டில் ஸ்திரதன்மைவாய்ந்த அர சை அமைக்கவேண்டுமென்று அமைச்சர்கள் பலரும்கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

### சபாநாயகருடன் ஜே. வி. பி. சந்திப்பு

(கொழும்பு)

மக்கள்விடுதலை முன்னணி யின் (ஜே·வி·பி) அரசியல் குழு நேற்று சபாநாயகர் அனு ரா பண்டாரநாயக்காவை சந்தித்து பேச்சுநடத்தியுள் ளது.

பாராளுமன்றம்செப்ரம்பர் 7ம்திகதி கூட்டப்படும்போது திரும்பவும் ஒத்திவைக்கப் படாமல் இருக்கவேண்டு மென்பதை சபாநாயகர் உறுதிப்படுத்த வேண்டு மென்று கேட்டுள்ளனர்.

இவைதொடர்பாக சபா நாயகர்அளித்த வாக்குறுதிச் செய்திஎழுதும் வரைகிடைக்க வில்லை. (வ)

### இலங்கையின் இனப்பிரச்சினையை ஆராய புதுடெல்லியில் இன்று மாநாடு

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச் சினை தொடர்பாக இன்று புதுடில்லியில் மாநாடொன்று நடைபெறவுள்ளது.

இன்றும், நாளையும் நடை பெறவுள்ள இம்மாநாட்டினை இந்திய அரசின் அனுசரணை யுடன் பாதுகாப்பு மற்றும் ஆய்வு நிலையம் ஒழுங்கு செய்துள்ளது.

இந்தியா இலங்கை என்ற தொனிப் பொருளில் இலங் கையின் இனபிரச்சினைக் கான தீர்வுபற்றி ஆராய்வு மேற்கொள்ளப்படவுளளது;

இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தமிழர் விடு தலைக் கூட்டணி சிரே ஷ்டஉபதலைவர் வீ.ஆனந்த சங்கரிபுளொட்தலைவர் தர்ம லிங்கம் சித்தார்த்தன், ஈ.பி. ஆர் எல் எவ் சுரேஷ்பிரேமச் சந்திரன் ஈபி டிபி ஆலோசகர் கலாநிதி விக்னேஸ்வரன் உட் பட 30 பேர் அடங்கிய தூதுக்குழுவினர் நேற்று

→10ஆம் பக்கம் பார்க்க

### அலவி மௌலானா தலைவராக தெரிவு

(பாங்கொக்)

பாங்கொங்நகரில் ஆரம்ப மாகியுள்ள சர்வதேச தொழி லாளர் அமைப்பின் 13வது

இம்மகாநாட்டில் 39நாடு களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (வ)

இன்றும், நாளையும் நடை பெறவுள்ள இம்மாநாட்டினை இந்திய அரசின் அனுசரணை யுடன் பாதுகாப்பு மற்றும் கொள்கை இடர்கள் பகுப்

கான தீர்வுபற்றி ஆராய்வு மேற்கொள்ளப்படவுளளது;

இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தமிழர் விடு தலைக்கூட்டணியின் சிரே

கலாநிதி விக்னேஸ்வரன் உட்பட 30 பேர் அடங்கிய தூதுக்குழுவினர் நேற்று

→10ஆம் பக்கம் பார்க்க

(பாங்கொக்)

பாங்கொங்நகரில் ஆரம்ப மாகியுள்ள சர்வதேச தொழி லாளர் அமைப்பின் 13வது ஆசியப்பிராந்திய மகாநாட் டிற்கு தொழில்அமைச்சர் அலவிமௌலான தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்;

இந்தமகாநாடு கடந்த 26ம் திகதிஞாயிற்றுக்கிழமைஆரம் பமாகி நேற்று 31ம்திகதியு டன் முடிவடைந்துள்ளது.

கடந்த ஆறு தினங்களாக நடைபெற்ற இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங் கைத்தூதுக்குழு அமைச்சர் அலவிமௌலானா தலைமை யில் சென்றிருந்தது,

இம்மகாநாட்டில் 39நாடு களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (வ)

# வானத்தில் பட்டம் படையினருக்குப் பதற்றம்

(கொழும்பு)

இரத்மலானை விமான நிலையத்திற்கு மேலாக பல வர்ணங்களில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்ட பட்டம் ஒன்று பறந்தமையால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இச்சம்பவம் கடந்த செவ் வாய்க்கிழமை இடம்பெற்றுள் ளது. இதுபற்றி மேலும் தெரிய வருகையில்;

சிவப்பு,பச்சை, மஞ்சள், நீலம் என பலவர்ணங்களில் எரியும் மின்குமிழைக் கொண்ட பட்டமொன்று மேற்படி விமான நிலையத் திற்கு மேல் பறந்ததாகவும் இதனைக்கண்ட விமானப் படையினர் விடுதலைப் புலி

→10ஆம் பக்கம் பார்க்க

# நேரடி வர்ணனை

[யாழ்ப்பாணம்]

செல்வச் சந்நிதி முருகன் ஆலயத் தேர்த்திருவிழா நேரடி வர்ணனை இன்று இலண்டன் ஐ.பி.சி. வானொலியில் ஒலிபரப் பாகும்.

இதற்கான ஏற்பாடுகளை அதன் யாழ் செய்தியாளர் தவச்செல்வன் மேற் கொண்டுள்ளார். (ந)

# கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவை யொட்டி நடாத்தபபடும் ஆறு பேர் கொண்ட பத்து ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று காலை 8.30 மணியளவில் யாழ் கொய் யாத்தோட்ட சனசமுக நிலைய மைதானத்தில் ஆரம்

(10ஆம் பக்கம் பார்க்க)

# மூப்பனாரின் உடல் தீயுடன் சங்கமம்

(புதுடில்லி)

இந்தியாவின் மூத்த அரசி யல் வாதியும் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவருமான ஜி. கே. மூப்பனாரின் பூதவு டல் அரச மரியாதையுடன் சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நேற்றுதீயுடன் சங்கமமாகி யது.

இந்து முறைப்படி நடை பெற்ற இச்சடங்கில் சிதைக்கு மூப்பனாரின் மகன் கோவிந்த வாசன் தீமூட்டினார்.

இறுதிச் சடங்கில் இந்திய குடியரசு துணைத்தலைவர் கிருஸ்ணகாந், தமிழக முதல் வர் செல்வி ஜெயலலிதா, கர்நாடக முதல்வர் எஸ். எம். கிருஸ்ணா, புதுவை முதல்வர் ரி. சண்முகம், ம. தி. மு. க. தலைவர் வை. கோபாலசாமி மற்றும் அரசி யல் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(ந-4)

# இலங்கையிலுள்ள அமெ. தூதரகம் எந்த நாட்டிற்கும் மாற்றப்படாது

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக் கத் தூதரகம் வேறு எந்த நாட்டுக்கும் மாற்றப்படமாட் டாது என்று வாஷின்டன் திட்டவட்டமாக அறிவித்துள் ளது.

தூதரகம்மாற்றப்படவுள்ள தாக பத்திரிகைகளில் வெளி வந்த செய்திகளையும் வா ஷிங்டன் நிராகரித்துள்ள தென அமெரிக்கத் தூதுவர் வர் ஆஸ்லிவில்ஸ் தெரிவித் துள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் ஆஸ் லிவில்ஸ் இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக் கையில்; இலங்கைக்கு விஜ யம் செய்வது தொடர்பாக முன்னைய எச்சரிக்கையில் எதுவித மாற்றமும் இல்லை என்றும் தெரிவித்த அவர்;

இனப்பிரச்சினை தீர்வில் தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய தொரு தீர்வை அமெரிக்கா வலியுறுத்தும். சமாதானத் தை ஏற்படுத்துவதன் மூலமே நாட்டின் பொருளாதாரத் தைக் கட்டியெழுப்ப முடியும்

இலங்கையின் உள் விவகா ரங்களில் தலையிடுவது தவறு என்று சிலர் கூறுகிறார்கள், சர்வதேச வர்த்தகத் தொடர் புகள் அதிகரித்து வரும்போது இது சகஜமாகி விடுகிறது.

→10ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம தேவாலய வீதியில் (யாழ். மத்திய கல்லூரிக்கு அருகாமையில் இல-9, இல-11 இல் அமைந்துள்ள இரு வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- இல-11, தேவாலய வீதி, யாழ்ப்பாணம்.

[3507]

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை சேகரிப்பவர் எம்மிடம் கொண்டுவந்து தந்தால் நல்ல விலைதந்து பெற்றுக்கொள்வோம். மல்ரி-ஒயில், கே.கே.எஸ். வீதி, இணுவில்.

(கி-2373)

# இனப்பிரச்சினைக்குதீர்வு காணாததன்விளைவே இன்றைய அ[...]ல நிலைக்கு காரணம்

## தமிழர் விடுதலைக் கூட்டணி செயலர் தெரிவிப்பு

(திருமலை)

தமிழ் தேசியப்பிரச்சினைக்கு தீர்வு காணாததன் விளைவேநாட்டின் உயிரோட்டத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் தீங்கை ஏற்படுத்தி வருவதாகதமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்;

நாட்டில் தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாகமேற்கண்டவாறு கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் தற்போது தோன்றிய அரசியல் பேரழிவிற்கு அடிப்படைக் காரணம் பதவி வெறியே ஆகும்.

நாட்டில் தோன்றிய அரசியல்நெருக்கடிக்குஇருதரப்பும் அரசணுகுமுறையைக்கடைப்பிடித்து தீர்வுகாண இருபெரும்கட்சிகளும் தவறியமையே காரணம் ஆகும்.

தமிழ் மக்களின் நலன்களுக்கு பாதகமான சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் மட்டும் தான் இரண்டு பிரதான கட்சிகளும் ஒத்துழைத்துள்ளன.

தமிழ் தேசியப் பிரச்சினைக்கு நீதியான உறுதியான தீர்வு ஒன்றைக் காண்பதாயின் மூன்றாம் தரப்பின் உதவியுடன் விடுதலைப் புலிகள் அமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்துவதே ஒரே வழியாகும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பானவிடயத்தில் தற்போது காணப்படும் தளர்வு நிலை நீக்கப்பட வேண்டும். (அ)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதியில் 265 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இரு கடைகளும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல-11 தேவாலயவீதி, யாழ்ப்பாணம்.

[3504]

# நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில்

# தேர்த்திருவிழா சிறப்பு மலர் 1-9-2001

## மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் அந்திரான் அழகன்

நவாலி அந்திரான் பதியில் அருளாட்சி புரிந்து வரும் முருகமூர்த்தியின் அளப்பருங் கருணை பேசற்கரியது. திக்கற்றோர், கவிஞர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் முதலாக மருவுவார் மனதிலே விளையாடி அருளும், பொருளும் அருளி வருபவன் அந்திரான் அழகன்.

ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றினைக் கொண்டதாக அந்திரான் முருகமூர்த்தி கோவில் அருள் பூத்துத் திகழ்கின்றது.

பல்லாண்டுகட்கு முன் இவ்வாலயத்தைச் சேர்ந்த மக்கள் நவாலியில் வயல் சூழ்ந்த பகுதியில் ஒரு கோவிலை நிறுவி வழிபாடியற்றி வந்தார்கள்; அவ்வாலயத்திலே வேறு சிலருக்கும் இவர்களுக்குமிடையே முகாமையுரிமை குறித்து ஏற்பட்ட பிணக்கு நீதி மன்றம் வரை சென்று உரிமை மறுசாரரார் பக்கம் திரும்பியது. அதனால் இப்பகுதி மக்கள் பெருங்கவலையுடன் எம்பெருமான் திருவுளத்தை அறியாது மனம் நொந்தனர்.

முருகப்பெருமான், அவர்களுள் ஒரு அடியாரின் கனவிலே தோன்றி அருள்வாக்கு அளித்தமைக்கு அமையவே இவ்வாலயம் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் சிறிய கோவிலில் மூலஸ்தானத்தில் வேலவனுக்கான வேலினை ஸ்தாபித்தே வழிபட்டு வந்தனர். காலப்போக்கில் கருங்கல் திருவுருவம் ஸ்தாபிக்கப்பட்டது. அலங்காரத் திருவிழா பத்து நாட்கள் நடத்தப்பட்டு வந்தன.

முருகப்பெருமானது திருவருளால் காலப்போக்கில் கோவிலுக்கு தூபி அழகுறக் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது கொடியேற்றத்திருவிழா, சப்பறத்திருவிழாதேர்த்திருவிழாதீர்த்தத் திருவிழா, திருக்கல்யாணம் என்று விழாக்களின் அழகு பொலிந்தன. கந்தசஷ்டி, சூரன்போர் என்பன இங்கு விசேடமிகு சிறப்புடன்நடைபெற்று வருகின்றன. விநாயகப்பெருமான், வைரவப் பெருமான், மனோன்மணி அம்பாள், கோபாலகிருஷ்




- கபிலர் -

## ஆறுதலை அருளவே ஆறுமுகனின் இரத பவனி

ஆன்ம ஈடேற்றத்திற்காகவே ஆலய வழிபாடுகள் உலகிலே பிறந்த மக்களாகிய எமக்கு இன்றியமையாத ஒன்றாகும். நாம் அனைவரும் உலகிலே மானிடராய்ப்பிறந்த தன் நோக்கம் மறுபிறவியை அறுப்பதற்காகவே ஆலயங்களிலே ஆண்டவனின் பஞ்ச கிருத்தியங்களை வெளிப்படுத்துவதற்காகவும் நித்திய பூசைகளில் ஏற்படுகின்ற குறைகளைப் போக்குவதற்காகவுமே மஹோற்சவங்கள் நடத்தப்படு கின்றன இன்றையதினம் ஆன்மாக்களாகிய மக்களின் ஆணவமலத்தை நீக்கி அருளைக் கொடுப்பதற்காக அந்திரான் பதி அழகன் ரதத்தினிலே ஆரோகணம் செய்தருள்கின்றான்.

எமது குலதெய்வமாகிய அந்திரான் பதியுறை அழகன் இன்று கட்டுத் தேரில் அமர்ந்து அழகுடன் வீதியுலா அருள்கின்றான், அறங்காவலரும் அடியார்களும் அவன் அருளால் சித்திரத் தேரினை அமைக்கும் திருப்பணியை மேற்கொண்டுள்ளனர். அந்த அருட்பணி இனிது நிறைவுபெற ஈராறு கரத்தையனை இறைஞ்சுகின்றேன்.

சிவாகமகிரியாரத்னம்
ஐ. சோ. கௌரீஸ்வரக் குருக்கள்
பிரதமகுரு அந்திரான்
முருகமூர்த்தி கோவில்.

## தரிசிப்போர் ஆராஅமிழ்தம் பெறுவர்

சீரார் நவாலியூர் செய்ய முருகவேள்
தாராரும் தாள்கள் தரிசித்தோர் -ஆரா

# அறநெறி நிலைத்து நிற்க தேரேறி வர வேண்டும்

அந்திரான் தியுறைந்து அருள் மழை பொழியும் அழகனே
அறநெறி நிலைத்து நிற்க தேரேறி வரவேண்டும்
ஆசைகளை அழித்தொழிக்க தேரேறி வரவேண்டும்
இல்லாதோருக்கு இரங்கி அருளத் தேரேறி வர வேண்டும்
ஈகையில் உலகம் உவக்கத் தேரேறி வரவேண்டும்
உலகத்தின் உயிர்ப் பொருளே தேரேறி வர வேண்டும்
ஊர் போற்றப் பார் போற்ற தேரேறி வர வேண்டும்
என்றும் உள்ள உண்மையே தேரேறி வரவேண்டும்
ஏகம் சத்தாக இருப்பவனே தேரேறி வர வேண்டும்
ஐயனே; ஆறுமுகனே; தேரேறி வர வேண்டும்
ஒற்றுமையில் சிறப்புணர்த்த தேரேறி வர வேண்டும்
ஓர் குலமாய் வாழவைக்க தேரேறி வர வேண்டும்
ஔவையின் ஞானப்பழமே தேரேறி வர வேண்டும்

நவாலியூர். மா. மீனலோசனி


## ஸ்ரீ தர்சினி

தையல இயந்திரம் திருத்தகம்

311, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்-

## V, K, RAJARATNAM

95. Stanley Road, Jaffna.


பெருமான், மனோன்மணி அம்பாள், கோபாலகிருஷ்ணன் பரிவார மூர்த்திகளாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளனர்.

முருகப் பெருமானுக்குரிய சிறப்பான தினங்களிலும் பரிவார மூர்த்திகளுக்கான தினங்களிலும் திருவிழாக்கள், சிறப்புப் பூஜைகள் முதலியன நடைபெற்று வருகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இராஜ கோபுரம் கலைவண்ணத்துடன் பக்தி உணர்வை ஊட்டும் வண்ணம் திகழ்கிறது.

அந்திரான் அழகன் தேர் ஊர்ந்து வரும் எழில் மிகு இத் திருநாளில் அடியார்களின் மனதில் அப் பெருமானுக்கு அழகிய சித்திரத்தேரினை அமைக்க வேண்டும் என்ற பக்திபூர்வமான ஆர்வம், அவர்களது கற்பனையில் ஆறுமுகப் பெருமானை புத்தம் புதிய அச்சித்திரத் தேரில் அமர்த்திப்பார்த்து மகிழ்கிறது. பக்தி பூர்வமான அந்த இனிய எண்ணம் பலித்திட அன்பர் பெருமக்கள் நிதியுதவி புரியும் வண்ணம் அனைவரும் ஆவலுடன் வேண்டுகின்றனர்.

சீரார் நவாலியூர் செய்ய முருகவேள்
தாராரும் தாளகள் தரிசித்தோர் -ஆரா
அமிழ்தம் பெறுவர் அவனிதனில் வாழ்வர்
தமிழுள் ளளவுந் தழைத்து

-திருமுருக கிருபானந்தவாரியா


## விக்னேஸ்வரா ரேட்ஸ்

நவாலி கிழக்கு, மானிப்பாய்.

## சுந்தர்சன்

மத்திய சந்தை முன்பாக; மானிப்பாய்.

## ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

18A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

## நியூ புவனேஸ்வரி மெடிக்கல் ஸ்ரோஸ்

69, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

# சந்நிதி முருகன் தேர் சிறப்புமலர்

## ஆலிலையில் அமுது கொள்ளும் ஆறுமுக வேலவன் தேரேறும் காட்சி சந்நிதியிற் காண்போம்



கந்தனுக்கு கோயிலும் கோட்டமும் வரலாற்றுச் சிறப்புகளும் மலிந்து இருப்பதனால் தான் சிவபூமியென சிறப்பித்துப் பேசப்படும் வடபுலத்தில் கந்தபுராண கலாசாரம் வேரூன்றி தளைத்து பெரு விருட்சமாகத் திகழ்கிறது. கந்தன் கருணையை அவன் பெருமையை பேசும் ஆலயங்களுள் ''முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான் பின்னைப் பிறப்பறுக்கும் பேராளனாகி நண்ணுவார் தமக்கு 'பெருங் கருணை மிகக் கொண்டு வருந்துயர் தீர்க்கும் மருந்தென்' தொண்டைமான் நதி தீரத்திலே திருக் கோயில் கொண்டுள்ள சந்நிதி சண்முகன் ஆலயமும் ஒன்றாகும். அடியந்தமிலா அயில் வேலேந்தி, புந்தியில் இருத்திப் புகழ்ந்து போற்றும் அடியவர்க்கு வடிவும், தனமும், நல் மனமும் குணமும் குலமும், குடியும் சீர் பொலிந்து வாழ செல்வச்சந்நிதி முருகன் அருள் பொழிகின்றான்.

### கதிர்காமருக்குக் காட்சி

அருணகிரியருக்கு அருள் உரைத்ததைப் போல, ஔவை பாட்டிக்கு அறிவூட்டி தரிசனம் தந்ததைப் போல, தொண்டைமானாற்றில் தொழிலில் ஈடுபட்ட ஏழை மருதர் கதிர்காமருக்கும் மருளை நீக்கி அருள் காட்சி காட்டி வினையறுத்து, வேல் கொடுத்து விளையாடியவன் முருகன். 'மதி கெட்டற வாடி மயங்கியற கதி கெட்ட வம்மே கெடாமல் 'ஞான சுகத்தைப் பருகி' அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து பங்கத்தைப் போகமாற்றி சங்கொத்த மேனிச் செல்வனுக்கு சரணாகதியாகி கண்ணீர் உகுத்து நின்ற கதிர்காமர் கந்தன் இட்ட பணியை சிரமேற் கொண்டார். தொடர்ந்தார் என்பது தலவரலாறு.

மணி தரளம் வீசியணி அருவியாம் மாணிக்க கங்கை மருவியோடும் கதிர மலையில் ஏது பிழை செய்யினும் தீது ஏதும் புரியாத தெய்வமான தென் புலத்துக் கந்தன் வன முகற வேடன் அருளும் பூசையில் மகிழ் வெய்துவது போல எங்கள் சந்நிதி வேலனும் மௌன பூசையைமகிழ்வோடு ஏற்றுள்ளான். வேதியர் இல்லை, வேத மந்திரம் ஒலிகள் இல்லை; வானுயர் கோபுரம் இல்லை. வனப் பூட்டும் மண்டப அமைப்புகள் இல்லை.

ஆலிலையில் அமுதுண்டு எவர்க்கும் அன்னை தந்தையாய் இருந்து அனைவருக்கும் அன்பையும் அருளையும் மழையாய் சொரியும் மூர்த்தியின் கீர்த்தியை சொல்லி முடியாது. ஒப்புடையன் அல்லன், ஒருவனல்லன், ஒருரனல்லன், ஓர் உவமைக்கும் எட்டாது 'தரித்திர தேவோபவ – துக்கி தேவோபவ, மூர்க்க தேவோபவ' என்று வேதம் [illegible] தற்கு ஒப்ப ஏழை பங்காளனாகி எளிய உருக் கொண்டு எளிய திருக்கோயிலில் அமைந்துள்ள ஆறுமுகன் ஏழைகளின் தெய்வமென்றாலும் பொய்யாகாது.

### அன்னதானக் கந்தன்

நெஞ்சக்கனகல்லு நெகிழ்ந்துருகத் தஞ்சம் தரும் சண்முகன், கருத்தில் நினைந்துருககை கூப்பும் தொண்டர் பிறவிப் பிணியும் நோயும் தீர்க்க கர்ப்பக் கிரகத்துள் ஆடும் பரிவேலாய் அணி செய்து அனுக்கிரம் அளிக்கிறான்.

படைக்கலமாக முருகா என்னும் நாமத்தை நாவில் நிறுத்தி ஞான வேலை நெஞ்சிலே சுமந்து, கந்தன் கழலை கருத்திலே எண்ணி, திருமுகத்தை தினமும் தொழுது தூய நீறணிந்து அடைக்கலம் உனக்கே என்று தன்னை யறிந்து தவமியற்றும் மாதவத் தாரை, ஆறுதல் வேண்டி அண்டினாரை நொந்து மனம் வாடி சிந்தையுள இருத்தி வருந்தி வந்தாரை ஆதரிக்கும் ஆறுமுகன் என்றும் அன்னம் பாலித்து அருபட்சி போக்கும் அன்னதானக் கந்தன் சந்நிதியான் என்றும் சான்றோர் போற்றுவார்.

இத்தகைய பல் சிறப்புக்களையும் புகழையும் பெற்று சந்நிதியில் அருளாட்சி புரியும் அற்புதக் கந்தனுக்கு இன்று தேர்.

'அழகும் பொலிவும் நெஞ்சை
யள்ளும் சித்திரத்தேர்
தீக்கிரை போனது நெஞ்சை
யுருக்கும். இத்துயரால்
இந்துக்கள் இதயங்கள் எரிந்
தன–தமிழ்குடிமக்கள்
நெஞ்சுகள் எரிமலையாய்
எரிந்தன–எங்கும் நீக்கமற
நிற்கும் முருகன் அறிவான்–
பிறவான்– இறவான்–
அழியான்–சாடும் தனிவேல்
நின்று கொன்று சாய்க்கும்
நீதி வெல்லும் என்றெண்ணி
மனதைதேற்றி எரியுண்ட
சித்திரத்தேரை நினைவு
கொள்வது இன்றும் பொருந்
தும்'

### நாற் புறமிருந்தும் நாடிவருவர்

சிங்கார வேலன் தேர்காண நாட்டின் நாலா புறமும் இருந்து மக்கள் அலை அலையாக வந்து சேர்வர். குரை கடல் ஓதும், ஆறுதல் சொல்லி ஆறோடும், நெய்தல் நிலக் காற்று வீசும், வீதியெங்கும் ஆறுமுகன் அருளோடும்– திருமண்ணிலே மயிலோடும்– தேரிலே கோழிக் கொடியாடும்–திருக்காட்சியை கண்டு அடியார்கள் மனங்களாடும். தேரிலே ஆரோகணித்து இருக்கும் அற்புதக்காட்சியை காண விண்ணிலே தேவரும் மூவரும் கூடுவர். மண்ணிலே வெள்ளமெனத்திரண்டு நிற்கும் பக்தர் கூட்டத்துள் ஆடி அசைந்து ஊர்ந்து வரும்கண் கொளாக் காட்சியை காண 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்றேங்க வைக்கும்; திருவீதியிலே முரசொலிக்கும், மங்கள வாத்தியம் ஒலிக்கும் தேவாரப் பண்ணொலிக்கும் –சண்முகபஜனை ஒலிக்கும், சங்கு ஒலிக்கும், வாழ்த்து ஒலிக்கும், செந்தமிழ் நூல் விரித்து செம்மையாய் காதது நிற்கும் செஞ்சுடர் வேலன் புகழ் ஒலிக்கும் அரோகரா கோஷம் ஒலிக்கும், பக்தர் மனங்களில் முருக நாமம் ஒலிக்க கூடத் தமிழும் ஒலிக்கும் இவ்வரிய காட்சியைக் காண்பார் "எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ சிந்தாகுல மானவை தீர்த்தெனையாண்டு' விடு என ஆனந்தக் கூத்தாடி வேண்டுவர். மும்மலங்களையும் அழித்து ஆன்ம ஈடேற்றத்துக்கு வழி காட்டும் தேர்த்திருவிழா திருக்கோலத்தை கண்டு தொழ கண்கள்காணாதே என்றெண்ணித் தொழுவர்.

சங்கடம் தீர்க்கும் சரவணபவனுக்கு மஹோற்சவ காலங்களில் மட்டுமல்ல நாளாந்த பூசைகளும் வெகு சிறப்பாகவே நடை பெறுவது சிறப்பானது. நீறணிந்து கெட்டார் எவருமில்லை என்பதால் தினந்தோறும் அடியார் வருகைக்கு குறைவில்லை. நேர்த்திக்கடன் நிறை வேற்றும் அடியார்கள் மஹோற்சவ காலத்திலும் ஏனையவிசேட தினங்களிலும் காவடியெடுத்தும், கற்பூரச் சட்டியேந்தியும், பாலகாவடி எடுத்தும், அங்கப்பிரதிஷ்டை செய்தும், அடியழித்தும், வழிபாடுயியற்றலை காணலாம் புனிதநதியில் நீராடி, சந்தன் நீறணிந்தால் தீராத நோயும் தீர்ந்து விடும் என்பதால் பக்தி சிரத்தையோடு சந்நிதி தலத்தை நாடுவார் பலருளர். சரணடைந்தார் சங்கடம் தீர்க்கும் சந்நிதியான் தாழ் பணிவோம். □

**கந்த. தியாகரராசா ஜே. பி**
(கோண்டாவில் கிழக்கு)

### குறையெல்லாம் நீக்கிடுவான்

எளிமை யான முருகப்பா சந்நிதி முருகன்
ஏழைகளின் தெய்வமப்பா சந்நிதி முருகன்
குளிர்மையான வாழ்வளிப்பான் சந்நிதி முருகன்
குறையெல்லாம் நீக்கிடுவான் சந்நிதி முருகன்.

**அளவையூர் கே.எஸ்.சிவஞானராஜா**

### கந்தன் பொற்பதம் பற்றிரு

நெற்றிக் கண்ணனின் வெற்றிச் செல்வன்!
நற்கதி நல்கிடும் அற்புத வள்ளல்!
சொற்பதம் கடந்த பெற்றியன் கந்தன்
பொற்பதம் தன்னைப் பற்றிடு நெஞ்சே!

இன்னல் எல்லாம் இல்லை யென்றாக்கி
இன்பம் ஒன்றே தந்திடும் சண்முகன்
சந்நிதி செல்வாய் சஞ்சல நெஞ்சே!
கந்தன் உந்தன் நற்றுணை என்றுணர்!

**நாயன் மார்க்கட்டு ப.மகேந்திரதாசன்**


சந்நிதி முருகனின் அருள் வேண்டி
நிற்கின்றோம்.

**ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்**

பஸ் நிலையம், பருத்தித்துறை.

இன்று தேரேறும் சந்நிதி முருகனின் அருள் அனைவரும்
பெற்றிட வேண்டி நிற்கின்றோம்.

**கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்**

கரவெட்டி

தலைவர்
பொதுமுகாமையாளர்,
பணியாளர்.

இன்று தேரேறும் சந்நிதி முருகனின்
அருள் அனைவரும் பெற்றிட வணங்கி
நிற்கின்றோம்.

**ஆங்கிலக் கல்லூரி**

239, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இன்று தேர் உலா வரும் சந்நிதி முருகனின் அருள் கிடைக்க வேண்டி நிற்கின்றோம்.

**திக்கம் வடிசாலை**

அல்வாய்

பொதுமுகாமையாளர்
ஊழியர்கள்.

## உயர்தரமாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

### இல-72 தொகுப்பு: ரீ. மயூரன்

#### நுண்ணறிவு

★ 1-5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட ஐந்து சொற்களுள் ஒன்று பொருத்தமற்றது அதன் கீழ் கீறிடுக.

1) ஆரம்பம், காரம், சருகு, ஆசாரம், பாகம்
2) ராஜ்குமாரி. ராகுலன், கண்மணி, லக்ஷ்மன், பகிரதன்
3) ஆ2A, மா3M, பா6P, சா8s, கா4K
4) சம்மதம், சப்பாத்து, சம்மட்டி, அட்டியல், சந்தல்
5) அப்பம், விளக்கு. இருட்டு, மேகம், கப்பல்

★ பின்வரும் எண் தொடரில் அடுத்துவரவேண்டிய எண்ணை கண்டறிக.

6) 2, 3, 5, 8, 12 ... — ... ...
7) 1, 5, 3, 7, 5, 9 ... ... ... ...
8) 3, 5, 9, 15, 27 ... ... ... ...
9) 60, 50, 55, 55,50,60, 45 ... ... ... ...
10) 3, 10, 4, 9, 5, 8 ... ... ... ...

★ பின்வரும் வினாக்களில் முதற் சோடி சொற்களிற்கிடையேயுள்ள ஒப்புமையை இனங்கண்டு மூன்றாவது சொல்லுக்குரிய சோடிச் சொல்லை அடைப்பில் இருந்து தெரிவு செய்க.

11) கிணறு:நீர், விளக்கு: (எண்ணெய், ஒளி, புகை, கரி)
12) விமானம்: பெற்றோல், முயல்; (ஓடும், தாவரவுண்ணி, புல், வெண்மை)
13) மார்ச்: ஒக்ரோபர், 7: (25, 22, 14, 35)
14) பாடல்: 3, நடனம் (2, 3, 4, 5)
15) நேரம்: செக்கன், உயரம் (மீற்றர், லீற்றர், ஓம், செக்கன்)

★ A, B, C, D, E என்னும் ஐவர் உள்ள வகுப்பில்யார்அதிக கூட்டுத் தொகை புள்ளிகளைபெறுகிறாரோ அவர் பௌதீகம் நன்றாக செய்வார் யாருக்கு மிகக் குறைந்த சராசரி வருகிறதோ அவருக்கு நிச்சயம் இரசாயனத்தில் குறைந்த புள்ளியே காணப்படும்.
வகுப்பில் முதலாம் பிள்ளையாக வருவது C ஆகும். அவருக்குப் போட்டியாக நிற்பது E ஆகும்.
B, D அண்ணளவாக சமனான அறிவுடையவர் ஆவர்.

★ மேற்படி பந்தியை துணையாகக்கொண்டுகீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

16) வகுப்பில் மிகக்குறைந்த சராசரி எடுப்பவர் யார்?
17) வகுப்பில் கெட்டிக்காரனாக கருதுவது யாரை?
18) வகுப்பில் இரண்டாம் பிள்ளையாக யாரை கூறலாம்?
19) வகுப்பில் பௌதீகம் நன்றாகச் செய்யக் கூடியவர் யார்?
20) இரசாயனவியலில் தேர்ச்சியற்றவர் யார்?

#### பொது அறிவு

★ A பகுதியில் நாடுகளும் B பகுதியில் தலைநகரங்களும் தரப்பட்டுள்ளன. பொருத்தமானவற்றுடன் தொடர்பு படுத்துக.

| | A | B |
|---|---|---|
| 21) | சீனா | பாரிஸ் |
| 22) | பிரான்ஸ் | புதுடில்லி |
| 23) | பிலிப்பைன்ஸ் | லண்டன் |
| 24) | இங்கிலாந்து | மணிலா |
| 25) | இந்தியா | பேஜிங் |

★ சுருக்கமான விடை தருக?

26 முக்கூட்டு வக்சின் எந்நோய்களுக்கு எதிராக கொடுக்கப்படுகிறது?
27) நுணுக்குக் காட்டியை கண்டுபிடித்தவர் யார்?
28) ஐ.சி.ஆர். சி'ஐ ஸ்தாபித்தவர் யார்?
29) இலவச சீருடைத் திட்டம் எத்தனையாம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது?
30) போர்த்துக்கேயர் எத்துறைமுகத்தினூடாக முதன்முதலில் இலங்கைக்குள் வந்தனர்?

பின்வரும் சர்வதேச தினங்கள் கொண்டாடப்படும்மாதம் திகதியை தருக.

31) உலக சனத் தொகை தினம் ... ... ... ...
32) உலக பூர்வீக மக்களின் சர்வதேச தினம் ... ... ... ...
33) உலக அகதிகள் தினம் ... ... ... ...
34) உலக தபால் தினம் ... ... ... ...
35) உலக உணவு தினம்

★ பின்வரும் சுருக்கங்களுக்கான விரிவை தருக.

36) IDA = — = =
37) UNEP = = = =
38) UNU = = — —
39) UNFFA = = = —
40) UNIDO = = — =

குறிப்பு:

விடைகளை வேறுதாளில்எழுதிஅனுப்பவும். இதற்கான விடைகளை06-09-2001இற்கு மூன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

**அறிவியல் பகுதி**
**வினா இல - 72**
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு.
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ............
சொந்த முகவரி: ............
கற்கும் பாடசாலை: ............
மாணவர் கையொப்பம்: ............

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

---

## உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் பயிற்சி வழங்க பெரும்பான்மை இனத்தவர் தெரிவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும் பெரும்பான்மை இனத்தவர்களாய் இருப்பது குறித்து இன விவகார தேசிய நல்லிணக்க மூலவள பிரதியமைச்சர் எஸ் கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தனது உத்தரவின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டத்திற்கு 40 பேரைத் தெரிவு செய்யுமாறுசிரேஷ்ட அதிகாரிகளைப் பணித்ததற்கிணங்க, தேர்வின் போது அவர்கள் காட்டிய இனப்பாகு பாட்டுப் போக்கினால் இவ்வாறுஇடம்பெற்றிருப்பது குறித்துச் சுட்டிக்காட்டியுள்ள பிரதியமைச்சர்,

பெரும்பான்மை இனத்தவர்கள் வடக்கு-கிழக்கில் உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் பயிற்சியளிக்கவிருப்பது அவர்களை இன்னமும் உளரீதியாகப் பாதிப்படையவே செய்யும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை உடனடியாக இது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு எஸ். கணேசலிங்கம் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (உ)

## இந்தியச் சிறையில் வாடிய 5 இலங்கை மீனவர்கள் நாடு திரும்புகின்றனர்

(கொழும்பு)

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் கடலுக்கு மீன்பிடிக்க சென்றசமயம இந்தியக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட ஐந்து இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கேரளகொச்சின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட இவர்கள் இன்று விடுதலையாகி நாடு திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை மீனவர்களில் சுமார் முப்பதுக்கு மேற்பட்டவர்கள் கேரளா, தமிழ் நாடு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-4)

## போக்குவரத்து விதிகளை மீறிய சாரதிகளால் அரசுக்கு 76 கோடி வரவு

(கொழும்பு)

போக்குவரத்து விதிகளை மீறிய சாரதிகளிடம் இருந்து கடந்த வருடம் 76 கோடி ரூபா அபராதப் பணமாக அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளது.

இதன்மூலம் போக்குவரத்துப் பொலிஸார் தமது கடமைகளில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவது புலனாகிறது என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்தார்

இந்த 76 கோடி ரூபாவில் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் ஆயிரத்து 68 வாகனங்களுக்கு 5 கோடி ரூபா எரிபொருளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

பொலிஸாரின்பரிசுப்பொருள் மற்றும் ஏனைய செலவுகளுக்கு 5 கோடி ரூபாவும் இதர செலவுகளுக்காக 34 கோடி ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது. (உ)

## பபியோவை அமெரிக்காவுக்கு கடத்த கொலம்பியா அங்கீகாரம்

(போஹோடா)

போதைப்பொருட் கடத்தல் மன்னன் என வர்ணிக்கப்படும் பபியோ ஓச்சாஹோவை அமெரிக்காவுக்கு நாடு கடத்துவதற்கான அங்கீகாரத்தை கொலம்பிய ஜனாதிபதி அன்ரஸ் பஸ்டானா வழங்கியுள்ளார்.

மாதாந்தம் சுமார் 500 கோடி டொலர் பெறுமதியான 30 தொன் ஹெக்ரேயினை இவர் கொலம்பியாவிலிருந்து அமெரிக்காவுக்கு கடத்தியிருக்கிறார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கைது செய்யப்பட்டார்.

இவர் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட விருப்பதை வாஷிங்டன் வரவேற்றுள்ளது. (உ-4)

---

### அறிவியல் வினா இல-71 விடைகள்

1) சனம்
2) அச்சம்
3) கும்பம்
4) பனம்
5) ஆசனம்
6) TM
7) MO
8) AB
9) OPQ
10) DB
11) சம்
12) புரி
13) கன்
14) வன்
15) மணி
16) 7
17) 35
18) 16
19) 21
20) 10
21) UN Children's Fund
22) International Maritime Organization
23) International Telecommunication Union
24) International Monetary Fund
25) World Health Organization
26) $CO_2$
27) DNA
28) தென்கொரியர்கள்
29) அமெரிக்கா
30) 1961
31) துருக்கி
32) பின்லாந்து
33) ரோமாபுரி
34) கென்ட்
35) ஒக்ஸ்போர்டு
36) ஒக்டோபர் 24
37) டிசம்பர் 2
38) நவம்பர் 20
39) மார்ச் 21
40) ஜுன் 17

### அறிவியல் வினா இல-71

அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

★ சி. சயந்தன், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
★ த. தாட்சாயினி நவாலி வீதி, ஆனைக்கோட்டை
★ பா சத்தியா கோகுலம், பொலிகண்டி
★ வீ. செந்தூஷன் மாசார் அ.த.க. பாடசாலை
★ அ ஜீவிதா பளைமத்திய கல்லூரி
★ வீ. செந்தீபன் மாசார் அ.த.க. பாடசாலை
★ செ. ஜெரீம் நிரோஷன் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
★ வீ. வினோதா மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
★ சி. கார்த்திகா நாவலர் வீதி, ஆனைப்பந்தி
★ அ. தீபன் அளவெட்டி
★ தி. சுமங்கலா சுந்தர் மடம்

---


தமிழர் விடுதலைக்கூட்டணியின் மக்கள் மனம் கவர்ந்து மறைந்த பாராளுமன்ற உறுப்பினர்களாகிய

**அமரர் வீ. தர்மலிங்கம்**
(பா. உ) மானிப்பாய்
அவர்களினதும்

**அமரர் மூ. ஆலாலசுந்தரம்**
(பா உ) கோப்பாய்
அவர்களினதும்

**16-வது நினைவஞ்சலிக் கூட்டம்**

இடம்: இராமநாதன் மகளிர்கல்லூரி மண்டபம்
காலம்: நாளை (02- 09 - 2001) ஞாயிற்றுக்கிழமை பி ப. 3-00 மணி
தலைவர்: ச. முத்துலிங்கம் அவர்கள் (முன்னாள் கிராமசபைத்தலைவர் உடுவில்)

நினைவுப் பேருரை, அஞ்சலி உரை என்பன இடம்பெறும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி
இணுவில் (3505)

# சமய, சமூக நலன்களுக்காக அயராதுழைத்த ஆன்மீகப் பெரியார் 'ஆத்மஜோதி முத்தையா'

தர்மமே உயிர்த்துணை என்று உணர்ந்து தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் அவ்வழியில் வாழ ஆற்றுப்படுதியபெருமை ஆத்ம ஜோதியின் வாழ்வில் காணக்கூடியதாக இருந்தது.

சமயமென்பது வெறும் புறக்கிரியைகளோடு நின்றுவிடாது இறைவன் திருவருளை நினைந்தபடி உயர் பேற்றைப் பெற அவனருளை நாடுவதாக அமைந்துவிட வேண்டும். இதனை யாழ்ப்பாண மண் பெருமையோடு என்றும் பேணி ஆத்மீக வாழ்வில் இருந்து விலகாது வாழ்ந்துவருகிறது. இந்த உண்மை நெறிவழி திருவருட்துணைகொண்டு நடந்து சாதனைபல செய்தவரே ஆத்மஜோதி நா. முத்தையா ஆவார்.

### தோட்டத் தொழிலாளர் நலனிற்காக உதவியவர்

ஏழாலைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்துகொண்டு நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். மலைநாட்டுப் பகுதியில் வாழ்ந்ததோட்டத் தொழிலாளர் நல்வாழ்விற்கு தாமேதும் உதவவேண்டும் என எண்ணினார்; அவர்கள் சமய சமூக பொருளாதார அரசியற்துறைகளில் மிகவும் தாழ்ந்தநிலையிலே காணப்பட்டனர். இது ஆத்மஜோதியின் நெஞ்சத்தைத் தொட்டது. அவர்களின் துன்பத்தில் தானும் பங்கு கொண்டு தோட்டம் தோட்டமாகச் சென்று அவர்களின் நல்வாழ்வை உயர்த்த உதவினார். சமய, சமூக அரசியல் விழிப்புணர்ச்சி பெறக்கூடிய ஓர் உத்வேகத்தை அவர்களுக்கு வழங்கினார்; ஏழ்மையின் மிகுதியால் தமது படிப்பைத் தொடர முடியாதவர்களுக்கு படிப்பைத் தொடர ஏற்றவற்றைச் செய்து கொடுத்தார்; சுகாதாரச் சீர்கேடுகளை களைவதற்கு வைத்திய அதிகாரிகளின் ஆலோசனையையும் அவர்களின் உதவியையும் பெற்றார்:

அந்தவகையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டவர் வரிசையில் முதன்மையானவர் பேராசிரியர் எஸ். சிவஞானசுந்தரம் (நந்தி) ஆவார்;

### பேராசிரியர் நந்தியும் ஆத்மஜோதியும்

பேராசிரியர் நந்தி ஆத்மஜோதி பற்றிக் குறிப்பிடுகையில்;

அவரது இந்த மக்கள் பணியை 35 வருடங்களாக அவதானித்த பாக்கியம் எனக்குண்டு. 1957 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நாவலப்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரியாக நியமனம் பெற்றேன்: போகும் வழியில்



பேராதனையில் எனது சிறிய தந்தையார் பேராசிரியர் வி. செல்வநாயகம் வீட்டில் தங்கியபோது அவர் ஆத்மஜோதி முத்தையாவுடன் தொடர்புகொள் உனக்கு வேண்டியது எல்லாம் செய்து தருவார் என்று கூறினார். தொடர்புகொண்டேன். அந்தத் தொடர்பின் ஆத்மீகப் பலனை நானன்று உணரவில்லை: அந்த தொடரில் நான் சமுதாய மருத்துவரானேன். நாவல் எழுதும் துறையிலும், ஆத்மீக சிந்தனையிலும் காலெடுத்து வைத்தேன் என்றார்.

பேராசிரியர் நந்தி போன்றவர்களோடு இணைந்து ஆத்மஜோதி மேற்கொண்ட பணிகள் எண்ணிலடங்கா. ஆத்மஜோதி பெரியார் இராமச்சந்திராவுடன் தொடர்புபட்டு ஆத்மஜோதி அச்சகத்தைப் பெற்று ஆத்மஜோதி சஞ்சிகையை வெளியிட்டு வந்தார். இச்சஞ்சிகை எமது நாட்டில் மட்டுமல்லாது இந்தியா, மலேசியா, சிங்கப்பூர்போன்ற நாடுகளிலும் பெருவரவேற்புப் பெற்றுத் திகழ்ந்தது.

### யோகசுவாமிகளுடன் பழகியவர்

ஆத்மஜோதி ஈழத்திலுள்ள தவஞானிகளோடும் இந்தியாவிலுள்ள பல தவ சிரேஷ்டர்களோடும் மிகுந்த பக்தியுள்ளவராகக் காணப்பட்டார்; நாவலப்பிட்டியில் இருந்து யாழ்ப்பாணம் வருகின்றபோதெல்லாம் சிவயோக சுவாமியைச் சந்திக்கத் தவறுவதில்லை. ஒரு முறை சிவயோக சுவாமிகளிடம் செல்லும்போது சுவாமிகளுக்கு கையுறையாக ஒருபையில் முந்திரிகைப்பழத்தை வாங்கித் தனது பையினுள் வைத்துவிட்டு, இன்னோர்பை பழத்தை தனது பெற்றோருக்கும் வாங்கிக்கொண்டு சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றாராம். சுவாமிகளை வணங்கிவிட்டு தனது பையிலிருந்து ஒரு பையை சுவாமிகளிடம் கொடுத்தார் ஆத்மஜோதி. சுவாமிகள் பழத்தை வாங்கிவிட்டு வீட்டுக்கு வாங்கிய பழத்தை மாறித் தந்துவிட்டாய் என்றார்; ஆத்மஜோதி திகைத்து விட்டார். சுவாமி எல்லாம் ஒன்றுதான் என்று கூறிவிட்டு ஆத்மீக ஞான சிந்தனை மிக்க கருத்துக்களைப் பேசத் தொடங்கினார்;

சி. சக்திகிரீவன்

இவ்விதமே ஆத்மஜோதி இந்தியாவிலுள்ள ரமணமகாரிஷி காஞ்சி, காமகோடி, பீடாதிபதி, பகவான் சத்திய சாயிபாபா, சுவாமி ராமதாஸ், அன்னை கிருஷ்ணாபாய், சுவாமி சிவானந்தர், சிவபாலயோகி, போன்றவர்களுடனும் பழகி அரிய ஆத்மீக அனுபவங்களைப் பெற்றுள்ளார்;

இவர் இலங்கையிலுள்ள பல தலங்களுக்கும் பாதயாத்திரையாகச் சென்று வழிபட்ட பெருமைக்கும் உரியவர். மேலும் இந்தியாவிலுள்ள பல புனித ஸ்தலங்களையும் தரிசித்துப் பேறுபெற்றவர்

[ 08-ம் பக்கம் பார்க்க]


## 25 வது ஆண்டு நிறைவு

# வடக்கேஓர் விளம்பரத்தின் உதயம்

செனித் மார்க்கட்டிங் அன் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் ஸ்தாபனத்தாரின் 25 வது நிறைவு ஆண்டு விழா வட இலங்கையின் அரச அங்கீகாரம் பெற்ற விளம்பர முன்னோடிகளான செனித் மார்க்கட்டிங், அன் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் ஸ்தாபனத்தார் தமது விளம்பரதாரர்கள் நண்பர்கள் அன்பர்கள் நலன்விரும்பிகள் மிக முக்கியமாக பத்திரிகையாளர்கள் ஒலிபரப்பாளர்கள் இங்கு பெயர் குறிப்பிடமறந்த அனைவருக்கும் கரம்கூப்பி சிரம் தாழ்த்தி தமது நன்றி அறிதலை இந் நன்னாளில் தெரிவித்துக் கொள்கிறார்கள். தொடர்ந்தும் இனி வரும் வருடங்களில் உங்களது ஆதரவை நல்கி நிற்கிறார்கள்.

யாழ்.நகரில் பதினெட்டு வருடங்களாகவும் தலைநகரில்ஏழு வருடங்களாகவும் விளம்பர சேவையை, 25 வருடங்களாக சேவையை நல்கி வந்த செனித் மார்க்கட்டிங் அன் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் ஸ்தாபனத்தார் 01 - 01- 2002 முதல் செனித்MandA Pvt லிமிட்டெட் என்னும் புதிய பெயரில் யாழ். மக்களுக்கு சேவையாற்ற இருக்கிறது என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

உங்கள் விளம்பரங்கள் எதுவானாலும் ரேடியோ, T. V. பத்திரிகை.

வந்து எங்களை சந்தியுங்கள் உங்கள் வியாபார விற்பனை சரிந்துவிட்டதா? சிந்திக்காமல் எங்களைச் சந்தியுங்கள்.

**ஜோ. எகட்டன்**
செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங்சிஸ்டம்ஸ்
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை
கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

கிளை; 22ப, ஸ்ரான்லி வீதி,
(Dr. பரம்சோதிநாதர் மெடிக்கல் கிளினிக்கட்டிடம்)
யாழ்ப்பாணம்.

## இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகவர்கள்

இவ்விளம்பரத்திற்கு நேசக்கரம் நீட்டியவர்கள்-

**வடபகுதியில் பிமல் தயாரிப்புக்களின் ஏகவிநியோகஸ்தர்களான**

**சிவா நறுமணப் பூங்கா**
இல. 288, ஆஸ்பத்திரி வீதி (சத்திரச் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம். தொலைபேசி 2567

பிமல் உங்கள் குடும்ப வைத்தியர்
என்றும் எப்போதும் உங்கள் வீட்டில் இருக்கவேண்டியது
பிமல் ஆயுள்வேத மருந்துகள், மூலிகைகள்

இன்று எமது விசேட நிகழ்ச்சியை (01. 09. 2001) இரவு 9. 30 மணி முதல் யாழ். சேவையில் கேட்டு மகிழுங்கள்

(சி-2445-)

# கணவனை இழந்த பெண்கள்

உலகெங்கும் உள்ளசனத்தொகையில்பெண்களின் பெருக்கமானது பெரும் செல்வாக்கை செலுத்தி வருவது தெரிந்தன்ஒறே· அதிலும் கணவனை இழந்த பெண்களின் தொகை தற்போது அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவாக கணவனை இழந்த பெண்களின் தொகை கணிசமான அளவு அதிகரித்துள்ளது என புள்ளி விபரங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன.

பொதுவாக கீழைத்தேய நாடுகளில் பெண்கள் இரண்டாந்தர பிரஜையாக நோக்கப்படுகின்றனர். அதிலும் 'விதவைகள்' என்ற கணவனை இழந்த பெண்கள் உள்ளத்தாலும், உணர்வாலும் பொருளாதாரத்தாலும் சமூகத்தின் பல்வேறு முகங்களாலும் சொல்லொணாத் துன்பம் அடைகின்றனர்.

## கணவனது இழப்பிற்கான காரணங்கள்

ஒரு பெண்ணானவள் வேறுபட்ட வயதில் பல்வேறு வழிகளில் கணவனை இழக்க நேரிடலாம். இவ் இழப்பிற்கான காரணங்கள் கீழ் வருவனவற்றில் ஒன்றாக அமையலாம்;

★ நோய்
★ தற்கொலை
★ விபத்து
★ வன்செயல்
★ கொலை

## கணவனை இழந்தவர்கள் பற்றிய சமூகத்தினது எண்ணக்கரு

எமது சமுதாயததின் பார்வையில் திருமணமான பெண் சமூகத்தில் தனித்துவமான அந்தஸ்தைப் பெறுகின்றாள். இந்நிலை, கணவனை இழக்கும் போது சமூகத்திலிருந்து பறிக்கப்படுகின்றது:

★ உடன் கட்டை ஏறுதல்
★ தலையை மொட்டை அடித்தல்
★ வீட்டின் பின்புறம் வசித்தல்
★ வெள்ளைப் புடவை கட்டுதல்
★ பொட்டிடல் கூடாது
★ அலங்கரித்தல் கூடாது
★ வேறு மணம் புரிதல் கூடாது
★ சுப நிகழ்வுகளில் முன்னிற்றல் கூடாது

போன்ற கட்டுப்பாடுகளை கணவனை இழந்த பெண்கள் மீது சமூகம் திணித்திருந்தது.

தற்போது போரின் காரணமாக ஏற்பட்ட விதவைகளின் பெருக்கத்தாலும் வெளிநாட்டு கலாசார ஊடுருவலாலும் சமூகத்தின் மன நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது.

★ உடன் கட்டை ஏறுதல் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது
★ தலை மொட்டையடித்தல் தவிர்க்கப் கப்பட்டுள்ளது.
★ நிறப்புடவை அணிதல்
★ தன்னை அலங்கரித்தல்
★ தத்தமது தேவையின்நிமித்தம் வேலைக்குச் செல்வது
★ சுப நிகழ்வில் பங்கேற்றல்
★ மறு மணம் புரிதல்

போன்ற மாற்றங்களின் சாட்டிகள் கணவனை திற்கு எதிர் விளைவைக் காட்டுவதாகவும் சம்பவத்தை ஏற்றுக் கொள்ள முடியாததாகவும் உள உணர்வுக் கொந்தளிப்பு அதிகமானதாகவும் காணப்படும்.

காணாமல் போய் இறந்ததாகக் கருதப்படும் கணவனை இழந்த பெண்களுடைய மன உணர்வானது மேற்கூறப்பட்ட இரு நிலைகளுக்குள்ளும் அடங்காமல் ''இது பொய்'' என்றும் சில வேளைகளில் ''நடந்தால்'' என்றும் குழப்பத்தோடும் தவிப்போடும் காணப்படுவதை அவதானிக்கலாம்.

கணவனின் இழப்பானது ஓர் ஆழமான ''நோவு தரும்'' அனுபவம் ஆகையால் பெண் உளப் பாதிப்புக்கு உள்ளாகிறாள். கணவனின் இழப்பிற்கு உரிய முழுப் பொறுப்பும் தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும் உடையதாகக் கருதுகிறாள். ''எனது பலன் இவ்வாறு முடிந்தது'' என்றோ ''நான் அதிர்ஷ்டமில்லாதவள்'' என்றோ தன்னைத்தானே உள ரீதியாக சித்திரவதைக்கு உட்படுத்திய வண்ணம் காணப்படுவாள். அதிலும் கணவனின் இறப்பின் முன் அவருக்குரிய கடமைகளைச் செய்ய முடியாதவர்களில் அவரைப்பார்க்கமுடியாதவர்கள், சண்டையின் காரணமாகபபிரிந்திருப்பவர்கள், கணவன் தற்கொலை செய்த மனைவிமார்களில் இந்த உளரீதியான சித்திரவதை அதிகமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. இவர்கள்

ஆக்கம்:

**பெண் உளவளத்துணை இணைப்பாளரும் உளவளத் துணையாளர்களும்**

தம்மைத்தாமே குற்றம் கண்டு பிடித்துக் கொண்டும், தம்மை வெறுத்துக் கொண்டும். தம்மீதான கோபத்தை பிறரில் வெளிப்படுத்திய வண்ணமும் காணப்படுவர்.

கணவனது இறப்பு நிச்சயிக்கப்பட்டது என்றாலும், திடீரென நிகழ்ந்தாலும் காணாமல் போய் இறந்தாலும் மனைவி முதலில் அதிர்ச்சி நிலைக்கு உட்படுகிறாள். அதிர்ச்சியின் தன்மையின் வெளிப்பாடானது ஆளுக்கு ஆள் சம்பவத்துக்குச் சம்பவம உறவு நிலையின் தன்மைக்கு ஏற்ப வித்தியாசப்படும. மயங்கி விழுதல், விறைப்பு நிலை, தற்கொலை முயற்சி, கதறி அழுதல், விழுந்து புரளுதல், வாய்பிதற்றல் போன்ற செயற்பாடுகளை பொதுவாக உடன் அவதானிக்கலாம்.

தமக்கு நடந்த இழப்பானது ''பொய்'' என்று நம்ப மறுக்கும் தன்மை இவர்களில் காணப்படும். ''அவர் இப்பத்தானே சாப்பிட்டு விட்டுப் போனவர்'', ''இப்பத்தானே கதைத்து விட்டு வந்தனான்'', என உண்மைச் சம்பவத்திற்கு எதிராக சாட்சியங்களைத் திரட்டி சம்பவததை பொய்யாக்க முயல்வர். அது மட்டுமன்றி கணவனது இழபபிற்குரிய காரணங்களைத் தேட முயலவர். அவரைப் பராமரித்தவர்களில் வைத்தியர்களில் தாதியில் உறவினர்களில், கடவுளில, விதியில் தம்மில் காரணங்களை கண்டறிந்து அவர்களைக் குற்றஞ் சாட்ட முனைவர்.

பாதிக்கப்பட்டவர் உடனடியாக மனச் சோர்வுக்கு உள்ளாகிறார்: தனது வாழ்வே சூனியமாகி விட்டது. என மூலையில் முடங்கலும் தொடர்ந்து அழுத வண்ணம் காணப்படு அவரினால் கிடைக்கப் பெற்ற பொருளாதாரமும் குறைவாகவே காணப்படும். இதனால் குடும்பத்தினது பொருளாதார நிலை திடீரென வீழ்ச்சியை நோக்கிச் செல்லும்.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வேலை வாய்ப்பை வழங்க கூடிய நிறுவனங்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றது. இதனால் கணவனை இழந்த பெண்கள் வேலை வாய்ப்பைப் பெறும் நிலை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இது மட்டுமன்றி அவர்களது கல்வித்தரம் வினைத்திறன், மூலதனம் இன்மை போன்ற காரணிகளும் அவர்களுடைய வேலைவாய்ப்பை பெற்றுத்தர தடையாக உள்ளகாரணியாகும். எனினும் சில உதவி வழங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களும் அரசாங்கமும் கணவனை இழந்த பெண்களின் பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

கணவனை இழந்த பெண்களின் பொருளாதார வீழ்ச்சிக்கு அவர்களது விழிப்புணர்வுக் குறைவும். எமது நாட்டில் நடைபெறும் போரின் அனர்த்தம் காரணமாக வீடு. உடைமை:

**யுனிசெவ் ஆதரவுடன் 1997- ம் ஆண்டிலிருந்து பெண்களிற்கும் சிறுவர்களுக்குமான உளவளத் துணை சுகவாழ்வு நிலையத்தில் (514/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) நடைபெற்று வருகின்றது.**

சொத்து, மூலதனம் இழக்கப்படுவதும் அடிக்கடி ஏற்படுகின்ற இடப்பெயர்வு போன்றவையும் முக்கிய காரணிகளாக அமைகின்றது. அத்துடன் கணவனுடைய இறப்பிற்கு பின்னதாக ஏற்பட்ட மனவலிமை இழப்பும் மிக முக்கிய காரணியாக கூறப்படுகின்றது.

## நாம் செய்ய வேண்டியவை

கணவனை இழந்த பெண்கள் உளத்தாலும் உணர்வாலும், சமூகத்தாலும் பொருளாதாரத்தாலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களை அனுதாபத்தோடு நோக்குவதுடன் மட்டும் நின்றுவிடாமல். அவர்களை திரும்பவும் சமூகத்துடன் இணைக்க முயல வேண்டும்:

★ கணவனை இழந்த பெண்களின் நிலைபற்றி சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்
★ அவர்களுடை உணர்வுகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.
★ அவர்களின் தாக்கத்தைப் பற்றி கதைக்க வைத்தல் வேண்டும்,
★ அவற்றை செவிமடுத்தல் வேண்டும்
★ அவர்களுடைய உண்மை நிலையை ஏற்றுக் கொள்ளச் செய்தல் வேண்டும்.
★ அவர்களை பாதுகாப்பான முறையில் உளவளத்துணை நடைபெறும் இடங்களுக்கு இட்டுச் செல்லுதல் வேண்டும்.
★ அவர்களுடன் நேரத்தை செலவிடுதல் வேண்டும்.
★ அவர்களுடைய வழமையான பணிகளை செய்ய தூண்டுதல் வேண்டும்.
★ இறந்தவர்களைப் பற்றி கதைக்க, அவர்களுக்குரிய கடமைகளைச் செய்ய, இழப்பிற்காக அழ அனுமதித்தல் வேண்டும்.

போன்ற கட்டுப்பாடுகளை கணவனை இழந்த பெண்கள் மீது சமூகம் திணித்திருந்தது.

தற்போது போரின் காரணமாக ஏற்பட்ட விதவைகளின் பெருக்கத்தாலும் வெளிநாட்டு கலாசார ஊடுருவலாலும் சமூகத்தின் மன நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது.

- ★ உடன் கட்டை ஏறுதல் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது
- ★ தலை மொட்டையடித்தல் தவிர்க்கப்கப்பட்டுள்ளது.
- ★ நிறப்புடவை அணிதல்
- ★ தன்னை அலங்கரித்தல்
- ★ தத்தமது தேவையின்நிமித்தம் வேலைக்குச் செல்வது
- ★ சுப நிகழ்வில் பங்கேற்றல்
- ★ மறு மணம் புரிதல்

போன்ற மாற்றங்களின் காட்டிகள் கணவனை இழந்த பெண்கள் மீதான சமூக மாற்றத்திற்கு சான்றாக அமைகின்றது.

## கணவனை இழந்த பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

கணவனை இழந்தபெண்கள் தனித்துநின்று பல்வேறு பிரச்சினைகளிற்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது;

### ★ உளஉணர்வுப் பிரச்சினை

கணவனது இறப்பின் தன்மைக்கு ஏற்ப மனைவிகளின் உள,உணர்வு நிலைவேறுபடும். சாதாரண நாட்பட்ட நோய் நிலையில் இயற்கையாக கணவனை இழந்த பெண்களுக்கும் சடுதியாக அல்லது வன்செயலால் கணவனை இழந்த பெண்களுக்கும் இடையேயுள்ள உணர்வுகள் வித்தியாசமானவை.

'கணவன் படுத்த படுக்கையாக உள்ளார். அவரின் உடல் சக்திகள் நாளுக்கு நாள் குன்றிய வண்ணம் உள்ளதுஉறவினர்கள் அவரைப் பார்க்க வருகின்றனர். அவரின் இறப்பு நிச்சயிக்கப்பட்டது' என்ற நிலையில் உள்ள ஒருபெண்ணின்,உள உணர்வானது எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வை சந்திக்கும் மன உணர்வை ஒத்ததாகவும் சம்பவத்தினது தாக்கம் குறைந்ததாகவும் காணப்படும். ஆனால் சடுதியான மரணத்தினால் கணவனை இழந்த பெண்ணினது மனநிலையானது சம்பவத்

போன்ற செயற்பாடுகளை பொதுவாக உடன் அவதானிக்கலாம்;

தமக்கு நடந்த இழப்பானது ''பொய்'' என்று நம்ப மறுக்கும் தன்மை இவர்களில் காணப்படும். ''அவர் இப்பத்தானே சாப்பிட்டு விட்டுப் போனவர்'', ''இப்பத்தானே கதைத்து விட்டு வந்தனான்'', என உண்மைச் சம்பவத்திற்கு எதிராக சாட்சியங்களைத் திரட்டி சம்பவதை பொய்யாக்க முயல்வர். அது மட்டுமன்றி கணவனது இழபபிற்குரிய காரணங்களைத் தேட முயலுவர். அவரைப் பராமரித்தவர்களில் வைத்தியர்களில் தாதியில் உறவினர்களில், கடவுளில, விதியில் தம்மில் காரணங்களை கண்டறிந்து அவர்களைக் குற்றஞ் சாட்ட முனைவர்;

பாதிக்கப்பட்டவர் உடனடியாக மனச்சோர்வுக்கு உள்ளாகிறார்: தனது வாழ்வே சூன்யமாகி விட்டது. என மூலையில் முடங்கலும் தொடர்ந்து அழுத வண்ணம் காணப்படுதலும் தனது தோற்றததைக் கவனியாது இருத்தலும் கோபம் கொளளுதலும், வெறுப்பு, எரிச்சல, விரக்தி, போன்ற உணர்வுகளை அதிகமாக வெளிக்காட்டுவதும் இவர்களில் உடனடியான செயற்பாடுகளாக காணக் கூடியதாக உள்ளது. நாள்பட்ட குணங் குறிகளாக நித்திரையின்மை பசியின்மை, நெஞ்சுநோ, பதட்டம், பதகளிப்பு ஆஸ்மா, வயிற்றுப புண், தலையிடி, தலைச் சுற்று, திடீர் மயக்கம், கை கால் பிடிப்பு, போன்ற மெய்ப்பாட்டு நோய்களை இவர்களில் பொதுவாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அத்துடன் இறந்தவரை அடிக்கடி கனவில் தேட முயல்வதும அவருடன் வாழ்ந்த நாட்களைப் பற்றி, சம்பவங்களைப் பற்றி திரும்பத் திரும்பக் கதைப்பதும் கணவனுக்கு நெருக்கமானவர்களை உபசரிப்பதும் அவரது விருப்பங்களை நிறைவேற்றுவதும் அவருடைய படத்திற்கு மாலையிடல், தீபம் ஏற்றல், பூ வைத்தல் போனற செய்கைகளைச் செய்வதும் அவர்களது உள்ளத்தை திருப்திப்படுத்தும் செய்கைகளாக அமைகின்றன.

### ★ பொருளாதாரப்பிரச்சினை

கணவனை இழந்த பெண்கள் பெரும்பான்மையினர் பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்குகின்றனர். குடும்பத்தலைவனின் பொருளாதாரத்தில் தங்கி இருப்பது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பொதுவானது ஆகும். குடும்பத் தலைவனை இழக்கும் போது

- ★ கணவனை இழந்த பெண்களின் நிலைபற்றி சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- ★ அவர்களுடை உணர்வுகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.
- ★ அவர்களின் தாக்கத்தைப் பற்றி கதைக்க வைத்தல் வேண்டும்,
- ★ அவற்றை செவிமடுத்தல் வேண்டும்
- ★ அவர்களுடைய உண்மை நிலையை ஏற்றுக் கொள்ளச் செய்தல் வேண்டும்.
- ★ அவர்களை பாதுகாப்பான முறையில் உளவளத்துணை நடைபெறும் இடங்களுக்கு இட்டுச் செல்லுதல் வேண்டும்.
- ★ அவர்களுடன் நேரத்தை செலவிடுதல் வேண்டும்.
- ★ அவர்களுடைய வழமையான பணிகளை செய்ய தூண்டுதல் வேண்டும்;
- ★ இறந்தவர்களைப் பற்றி கதைக்க, அவர்களுக்குரிய கடமைகளைச் செய்ய, இழப்பிற்காக அழ அனுமதித்தல் வேண்டும். அவர்களில் உள்ள திறன்களை விருத்தி செய்ய பயிற்சிகளை வழங்குதல் வேண்டும.
- ★ சரியான முறையில் எதிர்காலத்தை திட்டமிட உதவுதல் வேண்டும்.
- ★ உதவி வழங்கும் நிறுவனங்களுடன் இணைத்தல் வேண்டும்.
- ★ சமூகத்தினால் செய்யக்கூடிய உதவிகளை பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழங்குதல் வேண்டும்
- ★ பிரச்சினையில் இருந்து விடுபட விரும்பும் கணவனை இழந்த பெண்களுக்கு உற்சாகமளித்தல் வேண்டும்;
- ★ சமூகத்தில் பொறுப்புக்களை கொடுத்தல் வேண்டும்;

போன்றவற்றை நாம் இப்பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழங்கலாம்;

## கணவனை இழந்த பெண்கள் செய்ய வேண்டியவை

- ★ உண்மை நிலையை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்;
- ★ வாழ்வை சரியான விதத்தில் நோக்கல் வேண்டும்.
- ★ நாளாந்த நடவடிக்கைகளை வழமைக்கு கொண்டு வருதல் வேண்டும்;

(8ஆம் பக்கம் பார்க்க]

யுனிசெவ் ஆதரவுடன் சுகவாழ்வு நிலையத்தின் வெளியீடு

## இன்று ஒரு தகவல்

# பைந்தமிழர் பண்பாடு

தமிழ்ப் பெருங்குடி மக்கள் கல்தோன்றிக் கலம் தோன்றாக் காலத்தே வேலோடு முன் தோன்றி மூத்த குடியினர் என்று புலவர் போற்றும் தொன்மை மிகுந்தவர்கள் மட்டுமல்ல, பிறர் தொழுது பின்பற்ற வல்ல பண்பாட்டுச் சிறப்பும் படைத்தவர்கள்.

பகைப்புலத்தை வெல்லுவதற்குபடை நடத்திச்செல்லும் பொழுதும் சரிகன்னல்மொழி மின்னல் இடைப்பெண் அரசிகளுடன் காதல் மொழி பயிலச் செல்லும் பொழுதும் சரி. அவர்கள் கடைப்பிடித்த பண்பாட்டுச் சிறப்பு, உலகத்தின் பழம்பெரும் நாகரிகங்கள் என்று கருதப்படும் பாபிலோனிய, எகிப்திய, சுமேரிய, கிரேக்க நாகரிகங்களை விடச் சிறந்ததாகும். பழங்காலத் தமிழர்கள் பாண்டிய நாட்டுமுத்தையும், சோழ நாட்டுப் பட்டையும், சேர நாட்டு அகிலையும் ஏற்றுமதி செய்யும் வணிகர்களாகவும், ஈழத்தையும், கடாரத்தையும் வெல்லுகின்ற வீரர்களாகவும் மட்டும் வாழ வில்லை, அறியாமை இருளிலே தவித்துக்கொண்டிருந்தவையத்தை வாழ்விக்க வந்த பண்பாட்டு ஆசிரியர்களாகவும்திகழ்ந்தார்கள். மேலை நாட்டுவரலாற்று ஆசிரியர்களும் வியந்து போற்றும் பழந் தமிழர் பண்பாட்டில் சிலவற்றைத் திருக்குறள் என்ற நூல் மூலம் திருவள்ளுவர் நமக்குத் தெரியவைத்திருக்கின்றார்.

ராதா

மட்டக்களப்பில்

# புலிகளின் தாக்குதலை தவிர்க்க தீவிர பாதுகாப்பு நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் பாரிய தாக்குதல்கள் இடம் பெறலாம் எனும் ஊகங்களின் வெளிப்பாடாக அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் தமது நடவடிக்கைகளைத் தீவிரமாக்கியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புலிகளின் முக்கிய தலைவர்கள் மட்டக்களப்பு விரைந்திருப்பது. மற்றும் அங்கு பொதுமக்கள் தாமே விரும்பி பிள்ளைகளை புலிகளுடன் இணைப்பது. புலிகள் இயக்கம் தம்முடன் இணையுமாறு பல்வேறு பிரசாரங்களை மேற்கொண்டு வருவது ஆகியவற்றின் பின்னணியில் படையினர் தமது நடவடிக்கைகளைத் தீவிரமாக்கியுள்ளதாய் தெரியவந்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக வவுணதீவு வாவியில் இரவு நேர மீன் பிடிக்கு படையினர் தடை விதித்துள்ளதுடன், வாவி மற்றும் கடற் பிராந்தியத்தில் தீவிர கண்காணிப்பில்ஈடுபட்டுள்ளனர். (உ)

# அண்ணனை வெட்டி கொலை செய்த தம்பி

(கொழும்பு)

பணக் கொடுக்கல் வாங்கல் காரணமாக சகோதரர்களிடையே ஏற்பட்ட பிணக்கு கொலையில் முடிவுற்றது.

அண்ணன் கடனாக வாங்கிய பணத்தை வாங்குவதற்காக கூரான கத்தியுடன் சென்ற தம்பி அங்கு இடம் பெற்ற வாக்குவாதத்தைத் தொடர்ந்து அண்ணனைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாகத் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் கிரியுல்ல பொலிஸ் பிரிவில் இடம் பெற்றுள்ளது. (உ)

## நினைவஞ்சலி கூட்டம்

(இணுவில்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர்களான வி. தர்மலிங்கம், மு. ஆலாலசுந்தரம் ஆகியோரது 16 வது நினைவஞ்சலிக் கூட்டம் நாளை பி. ப 3.00 மணிக்கு ச. முத்துலிங்கம் தலைமையில் இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் க. சிற்றம்பலம் நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார்.

நினைவஞ்சலி உரைகளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றஉறுப்பினர்களான வீ. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, சி. சிவமகாராசா மற்றும் பலர் நிகழ்த்தவுள்ளனர்

(உ-49)

இலங்கையில் இடம்பெறும்

# முக்கிய தாக்குதல் சம்பவங்களுக்கு வெளிச் சக்திகள் அனுசரணை

## சிஹல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீது மேற்கொண்டதாக்குதலுக்கு, வெளிநாடொன்று அனுசரணையாகஇருந்துள்ளதென்று, சிஹல உறுமயவின் எம். பி. சம்பிக்கரவைக்க தெரிவித்துள்ளார்

சிஹல உறுமயவின்கொழும்புத் தலைமையகத்தில் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் சம்பிக்கரவைக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

1985 ஆம் ஆண்டு பதவியில் இருந்த ஜே ஆர், ஜெயவர்த்தனாவின் அரசாங்கம், விடுதலைப்புலிகளோடு பேச்சு நடத்த வேண்டும் என்பதற்காக அனுராதபுரத்தில்விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்த வெளிநாடொன்று உதவியாக இருந்தது.

அதுபோன்றே தற்பொழுதும் விடுதலைப் புலிகளோடு பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்பதற்காக கட்டுநாயக்காவில் இடம்பெற்ற தாக்குதலுக்கு வெளிநாடொன்று உதவி புரிந்துள்ளதாக எம்பிரவைக்க குற்றம் சாட்டியுள்ளார். (இ)

## தெய்வீக சொற்பொழிவு

(மானிப்பாய்)

நவாலி அருள்மிகு அந்திரான் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி இடம்பெற்று வரும் தெய்வீக அருள சொற்பொழிவுகளில் இன்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை உப அதிபர் சிவத் தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் ''குருவாய் வருவாய்'' என்னும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றுவார்

(செ-120)

## தேர்த் திருவிழா

(மானிப்பாய்)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவிலில் தேர்த் திருவிழா இன்று 8 30 மணிக்கும் தீர்த்தோற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை 10.00 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (செ-120)

★ ★ ★

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரதவிக்ன விநாயகர் ஆலய தேர்த் திருவிழா இன்று பகல் 11.00 மணிக்கும் தீர்த்தோற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை பகல் 10·30 மணிக்கும் இடம் பெறவுள்ளன.

(செ-120)

## பௌர்ணமி கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

வலி தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் பௌர்ணமி நிகழ்ச்சி வலி தெற்கு பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தலைமையில் யாழ்: இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இன்று பி. ப 4.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் கலந்து கொள்வார்.

கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் கவிஞர் சு. துரைசிங்கம் கௌரவிக்கப்படுவார். (உ-104)

## அருள்புரிவாய் கந்தனே

அன்னதானக் கந்தனே!
அலங்கார புருசனே!
அடியார்கள் கூட்டத்தில்
அருமையான பஜனை
களும்
ஆடிவரும் காவடிகள்- என
அனைத்துஉந்தன்சேவ
டியை
அமைதி வேண்டி நாடி
வருகுது
அருள்புரிவாயே! கந்தனே.

கரவையூரான்

## சந்நிதியானைச் சந்தித்தால்---

ஆழ்கடல் மத்தியிலே
எழில் மிகு முருகனாய்.
அன்பர்கள் உள்ளத்தினிலே
அன்னதானக் கந்தனாய்
அந்நியர்க்கும் வரமருளும்
அந்தர்யாமியாய்- விளங்
கிடும்
சந்நிதியானைச் சந்தித்
தால்
சந்தோசம் பொங்கிடுமே

நா. ஜெயகௌரி
சைவப்புலவர்.

## எண் சோதிடம்

எண்களே இன்றைய உலகில் முதலிடம் வகிக்கிறது. எண்களை நீங்கள் துணைகொண்டால், எண்களே உங்கள் வாழ்வுக்கு துணையாக வருகிறது. வெற்றிகரமான, அதிர்ஷ்டகரமான நல்வாழ்விற்கு வழிவகுத்துத் தருகிறது எண் ஜோதிடம். இன்றே உங்கள் (ஆங்கில பிறந்த திகதி) பெயர் கையொப்பம் இட்டு, சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும்.

சனி ஞாயிறு மட்டும் நேரில் சந்திக்கலாம்.
எண்கலை ஆசான்,

சி. சி. கே.
ஸ்ரீராஜராஜேஸ்வரன்
வித்தனை வீதி,
வல்வெட்டித்துறை.

(3506)

## இன்று இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ் பெற்ற நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் இரதோற்சவம் இன்று காலை இடம்பெறவுள்ளது. (க)

## இராசி பலன்

1/09/2001
(ஆவணி 16, சனி)
சதுர்த்தசி பி.இ 1.12 வரை
அவிட்டம் முழுவதும்
ராகுகாலம் - 9 05 - 10 35
நல்லநேரம் - 3 05 - 4.35

**மேடம்**

புத்துணர்ச்சி, அதிகாரம், சுப நிகழ்வு, நல்ல முயற்சி.

**இடபம்**

தாழ்வு நிலை, ஆன்றோர் ஆசி, மனச்சஞ்சலம், காரிய தாமதம்.

**மிதுனம்**

வீண் தொல்லை, முயற்சி தாமதம், எதிர் பாராத அச்சம், பிரயாணக் கஷ்டம்.

**கடகம்**

தனவரவு, கௌரவம், விருந்துபசாரம், முயற்சி கைகூடும்.

**சிங்கம்**

தொழில் விருத்தி, நோய் குணமடைதல், நல்ல காரியம், சந்தோசம்.

**கன்னி**

பிரயாண இடைஞ்சல், உடல் சோர்வு, புத்திரரால் கவலை, முயற்சி தாமதம்.

**துலாம்**

கல்விச் சிறப்பு, பயந்தசுபாவம், அவநம்பிக்கை, காரிய தாமதம்.

**விருச்சிகம்**

பிரயாணம், கூட்டுமுயற்சி, முயற்சி கைகூடும், சகோதரர் உதவி.

**தனுசு**

நண்பர்கள் மனஸ்தாபம், பணச்செலவு, காரிய தாமதம், விவாதம்.

**மகரம்**

ஜனவசியம், புதுமுயற்சி, தேகசுகம், அமைதியான நிலை.

**கும்பம்**

காரியதாமதம், சுபசெலவு, கோபப்படுதல், பிதாசிந்தை

**மீனம்**

காரிய நன்மை, நண்பர்கள் உதவி, பொருள் சேர்க்கை, குடும்பசுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

-வளவன்

(நீர்வேலி அரசகேசரி விநாயகர் இரதோற்சவத்தை முன்னிட்டு வெளியிடப்படுகிறது)

## அழகு இரதமேறும் விநாயகா

அரச கேசரி ஐங்கரனார்
அற்புதமாய் அலங்கார தேர்வரவே
அடியார்கள் மனமுருகி
அரோகராஎனத் துதிக்க
அல்லல்கள் மறந்தன்பர்
ஆனை முகனைத் தொழுதிடுவார்
ஓங்காரதத்துவனார்
ஓம்பியே காத்திடுவார்

-நீர்வை மணி-

இன்றுத தமிழ்த்தூது தனிநாயகம் அவர்களின்21-வது சிரார்த்த தினமாகும்.

## தமிழ்வளர்த்த தனிநாயகம்

தொன்மைப் புகழ் படைத்த
அன்னைத் தமிழ் மொழிக்கு
தன்னைக் கொடுத்து மணி
வண்ண மகுட மிட்ட
கன்னித் தமிழ்த் தூதன்
கற்றறிந்த கலா ஞானி
பன்மொழிப் புலமை கொண்ட
பார்புகழ் தனிநாயகம் வாழ்க!

வேறு

தீவகத்தில் உதித்ததமிழ் முத்து
தாரக மந்திரமாய் தமிழ்ப்பணி யாற்றி
பாவமா சகற்றும் பரமனின் பணியாளனாய்
பாரெல்லாம் பண்பாட்டின் பெருமை சொன்னார்
ஆவலே கொண்டு தமிழன்னை புகழ் பரப்ப
ஆராய்ச்சி மாநாடு அகிலத்தில் தான் எடுத்தார்
காவிய நாயகன் கணனியாய்ச் செயற்பட்டு
ஆவிநீங்கும் வரைஅருந்தமிழ் பணிபுரிந்தார்.

வேறு

சொற் பெருக்கின் ஊற்றுத் தனிநாயகம்!
சுவைத் தமிழை அளித்தரும் பெரும் பண்டிதன்!
கற்பவர்க்குச் சிறந்த விரிவுரையாளன்!
காலத்தைப் புரிந்து சொல்லும் வரலாற்றாசான்!
விற்பன்னன் பன்மொழி இலக்கியக் கலாநிதி!
போற்றும் பல்துறைப் பேரறிஞன்தனி நாயகம் புகழ்
சாற்றுக தமிழ் உலகமெல்லாம்!
வீரத் தமிழ்த் தாயின் விடுதலை வீரன்!

அபிர்ராஜன்

# ஹெலிகள் மோதியதில் விமானிகள் பலியாகினர்

(சான் பிரான்சிஸ்கோ)

காட்டுத்தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தனியாருக்குச் சொந்தமான இரு ஹெலிகொப்ரர்கள் மோதிக்கொண்டதில் அவற்றின் விமானிகள் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் அமெரிக்காவின் கலிபோர்ணிய நகருக்கண்மையில் இடம் பெற்றுள்ளது.

கலிபோர்ணியாவில் 250 ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட காட்டில் ஏற்பட்ட தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபடும் பொருட்டு தரையில் இருந்து இரண்டு ஹெலிகளும் புறப்பட்டபோதே இவ் விபத்து இடம் பெற்றது. (க-4)

# சாள்ஸ்-கமீலா இணைவிற்கு பிரி.மக்கள் ஆதரவு

## கார்டியன் பத்திரிகை தெரிவிப்பு

(இங்கிலாந்து)

பிரித்தானிய இளவரசர் சாள்ஸ் தனது நீண்ட நாள் காதலியான கமீலா பார்க்கரை திருமணம் செய்வதையே அந் நாட்டில் வாழும் மக்கள் விரும்புகின்றனர்.

சாள்ஸ் கமீலாவை மணப்பதை பிரித்தானிய மக்கள் விரும்புகிறார்களா? என்ற கருத்துக்கணிப்பை கார்டியன் பத்திரிகை நடத்திய போதே இவ் விபரம் தெரிய வந்துள்ளது.

இக் கருத்துக் கணிப்பில்43 சதவீதமானோர் இத் திருமணத்திற்கு ஆதரவு தெரிவித்ததுடன் 32 சதவீதமானோர்கள் எதிர்ப்புத் தெரிவித்துமுள்ளனர்.

அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் பிரித்தானிய 50 ஆவது ஆண்டு பொன்விழாக் கொண்டாட்டங்களின்போது இவர்களின் திருமணம் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-4)

# இந்தோனேஷியாவில் ஒப்பந்தம் கைச்சாத்து

(ஜகார்த்தா)

உலகவங்கியும் இந்தோனேஷிய அரசும் 480 பில்லியன் டொலர் மதிப்புள்ள ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்தோனேஷியாவில் வறுமையைஎதிர்த்துப்போராடும் நோக்கத்துக்காக இந்நிதி பயன்படுத்தப்படும் என்று இந்தோனேஷிய நிதித்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தோனேஷியாவில் மலிந்திருக்கும் இலஞ்சம்மற்றும் ஊழல் சட்டவிரோதச் செயல்களுக்கு எதிராக தீவிர நடவடிக்கை எடுக்கும் நோக்குடன் ஊழல் ஒழிப்புக் குழு ஒன்றை அமைக்கப்போவதாகவும் மனித உரிமைகள் அமைப்பாளர் தெரிவித்தார்.

கிடைக்கும் நிதியைச் சீரான வழிகளில் செலவழிப்பதற்கு ஊழலற்ற குளறுபடியற்ற நிர்வாகத்தையே புதிய அதிபர் மேகவதி சுகர்னோ புத்திரி விரும்புகிறார் என்றும் தெரிவித்தார் (து)

### 14 ம் நூற்றாண்டில் நீரில் மூழ்கிய

# தீவை வெளிக் கொணர துரித கதியில் முயற்சி

[வெனிஸ்]

இத்தாலிக்கு மிக அண்மையில் உள்ள பொக்லமா பகுதியில் நீரில் மூழ்கிய தீவுஒன்றை வெளிக்கொணரும் பணிமுழு மூச்சுடன் முடுக்கிவிடப்பட்டதாக இத்தாலிய செய்திகள் தெரிவித்துள்ளன:

கி பி 14 ஆம் 16 ஆம் நூற்றாண்டில் நீரில் மூழ்கியசென் மார்க்கோ என்னும் தீவை அண்டிய கரைப்பகுதியைச் சூழ உருக்கினால் ஆன அணைகள் அமைக்கப்பட்டு நவீன நீரிறைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி நீரை வெளியேற்றும் பணி ஆரம்பமாகியுள்ளது.

இத்தீவின் பின்னணியை ஆராய்ந்த ஆய்வாளர்கள கருத்துத் தெரிவிக்கையில்; வின்சி வாவியின் தென்முனையிலிருக்கும் இத்தீவு 14 ஆம் நூற்றாண்டிலேயே மூழ்க ஆரம்பித்துள்ளது. இதனால் மக்கள் தீவை கைவிட்டுவெளியேறியுள்ளனர்.

ஆனாலும் அங்கு வாழ்ந்த மதத் துறவியர் அதனை கைவிடாமல் மடத்தினுள்ளே வசித்துவந்தனர். தீவு 16 ஆம் நூற்றாண்டு முற்றாக மூழ்கி மதகுருமாரும மற்றும் தீவின் கரைபோரப் பகுதியில் இரண்டு பெரும் கப்பல்களும் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்

நீரை இறைத்து தீவை வெளிக் கொணரும் பணிபலனளிக்காது என சில விஞ்ஞானிகள் தெரிவித்த போதும் கடந்த ஜூனில் ஆரம்பித்த இப்பணி வெற்றி கண்டபின்னரே கைவிடப்படும் எனபணியினை மேற்கொண்ட ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். [க-07-04]

# இந்திய- பாகிஸ்தான் பேச்சு விரைவில்

(நியூஜோர்க்,

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே பாதுகாப்பு சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க தலைமைப் படைப் பசிபிக் பயிற்சியைப் பார்க்க இந்தியத் தூதர் மான்சிங் மற்றும் இராணுவ அதிகாரிகள் அங்குசென்றதை அடுத்தே இப்பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இருநாட்டுப் பிரதிநிதிகளும் சந்தித்து உரையாடுவதற்கு இந்த சந்தர்ப்பம் ஒரு வாய்ப்பாக அமைந்தது என்று பசிபிக் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்தவாரம் நடக்கஇருக்கும் அமெரிக்க-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தப பேச்சினில் கூடுதல் இணைய பயிற்சிகள், இராணுவ அதிகாரிகள் பரிமாற்றம் இந்து மாகடல் வழியான கப்பல் போக்குவரத்து பாதுகாப்பு விவாதிக்கப்பட இருக்கின்றன. (து)

(5ம்பக்கத் தொடர்ச்சி)

சமய, சமூக

### சிறப்புரையாற்றியவர் பல மாநாடுகளில்

தனது வாழ்நாளில் சிறந்த சமயப் பேச்சாளராகத் திகழ்ந்து பல சைவமாநாடுகளிலும், சர்வமத மாநாடுகளிலும் உரையாற்றிய பெருமைக்குரியவராவார்.

சிறந்த ஆத்மீக எழுத்தாளரானஇவர் 15 இற்கு மேற்பட்ட நூல்களை எழுதிவெளியிட்டுள்ளார்.

1983 ஆம் ஆண்டு நாட்டில் நடைபெற்ற இனக் கலவரத்தின் போது சிங்களக் காடையர்களால் ஆத்மஜோதி நிலையம் பலத்த சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டது.

இதன்பின் தனது பணியை கண்டி வீதி சாவகச்சேரியிலுள்ள குருபவனம் இல்லத்தில்இருந்து மேற்கொண்டு வந்தார்.

இந்தக் காலப்பகுதியில் எமது நாட்டில் நடைபெறும் போர் காரணமாக எமது மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை எதிர்ப்பதற்காகவும், எமது மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும நல்லை ஆதீனத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இந்துசமயப் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### கைதடி சைவச் சிறுவர் இல்லம்

போர் காரணமாக அநாதைகள் ஆக்கப்பட்ட சைவச் சிறுவர்களின் நலன்களைப் பேண கைதடி சைவச் சிறுவர் இல்லத்தை இந்து சமயப் பேரவை பொறுப்பேற்று சிறந்த முறையில் நடத்த உதவினார். இவ் வில்லம் போர்ச்சூழல் காரணமாக ஏழாலையில் இயங்கிவருகின்றது. கனடா, சுவிஸ் போன்ற நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு எமதுநாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவேண்டிய அவசியத்தினை வலியுறுத்தி உதவ வைத்தார்.

### இலங்கை சுவிஸிடம் கற்க வேண்டும்

1994 ஆம் ஆண்டு சுவிஸ் நாட்டிற்கு சென்று திரும்பியவர் தனது சுவிஸ் சுற்றுப் பயணம் பற்றிக் குறிப்பிடுகையில் கிட்டத்தட்ட 70 லட்சம் மக்களைக் கொண்ட அந் நாட்டில் 25, 000 இலங்கைத் தமிழர்களுக்கு அரசியற் தஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒன்றரை கோடி மக்களைக் கொண்ட இலங்கை சுவிற்சிலாந்திடம் இருந்து பல விடயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. சுவிற்சிலாந்து 26 மாகாணங்களைக் கொண்டது. ஒவ்வொரு மாகாணத்திலும் மொழி, சமய, அரசியல் போன்றவற்றில் சர்வ சுதந்திரம் கொடுக்கப்பட்டு இருக்கின்றது இதனால் அங்குள்ள மக்கள் அமைதியும் சந்தோஷமும் உள்ளவர்களாகக்காணப்படுகின்றனர். ஒவ்வொரு மாகாணத்திலும் எந்தெந்த மொழிபேசும் மக்கள்கூடுதலாகக் காணப்படுகின்றார்களோ அதுவே ஆட்சி மொழியாகவும் உளளது: இதனை இலங்கை நன்கு படித்துக் கொண்டால் எமது நாட்டில் இனப் பிரச்சினைக்கு நல்ல தீர்வாகவும் அமைந்து விடும்; இந்த நாட்டில் அநியாயமாகத் தமிழ் இளைஞர்களும், சிங்கள இளைஞர்களும் அழிவதையும், எமது நாட்டுச் சொத்துக்கள் அழிவதையும் தடுத்துவிட முடியும். எமது நாட்டில் நாமும் பிரச்சினைகள் இன்றி சந்தோசமாக வாழ வழி உண்டாகும் என்றார்.

1995 ஆம் ஆண்டு கனடாவில் மொன்றியல் துர்க்கை அம்மன் ஆலயப் பெருவிழாவில் பங்குபற்றச் சென்றிருந்த வேளையில் 08 09.1995 இல் அவர் அம்பிகையின் திருவடியின் கீழ் அமரத்துவம் பெறும் அரும்பெரும் சீர்பெற்றார்.

### ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விண்ணப்பம்

# பாடரீதியான விபரங்களை உடன் அறியத் தரவும்

## வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு சுற்றறிக்கை

[யாழ்ப்பாணம்]

ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரும் போது ஆசிரியர்கள் விண்ணப்பிக்கும் படிவங்கள் தொடர்பானவிரிவான அறிக்கை ஒன்றை சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் ஒன்று சேர்ந்து தயாரித்து தனக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு- கிழக்கு-மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க: பரமேஸ்வரன் அறிவித்துள்ளார்;

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத் தன்மைக்கு மாறாக ஆசிரியபயிற்சிக்கலாசாலைகளில்பாடமாற்றங்கள் செய்யப்படுவதால் ஆரம்பக் கல்விக்குப் பற்றாக்குறை காணப்படுவதாகவும், வர்த்தகம், சமயம்போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் மேலதிகம் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே மேற்படி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது;

இதேவேளை,

ஆசிரியராகக்கடமையாற்றுகின்ற அதேசமயம் பல்கலைக் கழகத்தில் உள்ளக மாணவர்களாகக்கல்வி பயிலும் ஆசிரியர்கள் தொடர்பான விபரங்களும் கோரப்பட்டுள்ளன. (உ-6)

# சாரதி அனுமதி பத்திரங்கள் வழங்கல்

## இன்று முதல் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் பணி இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

பாரவூர்திகள் தவிர்ந்த மோட்டார் சைக்கிள், கார், உழவு இயந்திரம், முச்சக்கர வண்டி ஆகிய வாகனங்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரங்களே இவ்வாறு இன்று முதல் வழங்கப்படவுள்ளன

அனுமதி பெற்ற பாரவூர்தி சாரதியப் பயிற்சிப் பாடசாலைகள் குடா நாட்டில் இயங்காமையினால் பாரவூர்திகளுக்கான சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்க முடியாத நிலை காணப்படுவதாகவும் யாழ். செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# பேரியலுக்கு எதிரான மனு தள்ளுபடி

(கொழும்பு)

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியாக பேரியல் அஷ்ரப் செயற்படுவதற்குத் தடை விதிக்குமாறு கோரி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனு நேற்று முன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஏற்கனவே கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியாக செயற்படதடைவிதிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்த்தே மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுதாக்கல் செய்யப்பட்டதும் அந்த மனுவும் நேற்று முன்தினம்தள்ளுபடி செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

(6ம் பக்கத் தொடர்ச்சி)

# கணவனை இழந்த பெண்கள்

- ★ உதவிகளை சரியான விதத்தில் பயன்படுத்தல் வேண்டும்.
- ★ உணர்வுகளை மேற் கொள்ள விடாமல் உணர்வுகளை கையாளப் பழகிக் கொள்ளல் வேண்டும்.
- ★ இயல்பாக சமூகத்தில் ஒரு அங்கமாக வாழ்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடல்.
- ★ ஆளுமையை சிதைய விடாமல் வளர்க்க முயற்சித்தல்.

## 1999, 2000 ஆண்டுகளில்

| உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் | விதவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| தெல்லிப்பழை | 505 |
| வேலணை | 540 |
| நெடுந்தீவு | 185 |
| சங்கானை | 1892 |
| பலாலி | 304 |
| கரவெட்டி | 2583 |
| பருத்தித்துறை | 2279 |
| உடுவில் | 1745 |
| சாவகச்சேரி | 2228 |
| யாழ்ப்பாணம் | 1789 |
| நல்லூர் | 2106 |
| கோப்பாய் | 2653 |
| மருதங்கேணி | 227 |
| சண்டிலிப்பாய் | 1423 |
| ஊர்காவற்றுறை | 645 |
| மொத்தம் | 21104 |

## கணவனை இழந்த பெண்களின்

| வயது நிலை | வீதம் |
|---|---|
| 16- 30 | 3. 5% |
| 31- 40 | 10 5 % |
| 41- 50 | 15.4% |
| 50க்கு மேல் | 70. 6 % |

'பொள்ளென ஆங்கே புறம் வேரார் காலம் பார்த்து உள்வொப்பர் ஒண்ணியவர்
- குறள்

# வலம்புரி

## பிரபாவே தீர்மானிப்பார்

இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென்ற உண்மை நிலை பல வருடங்களுக்கு முன்னர் உணரப்பட்ட போதிலும், காலத்திற்குக் காலம் ஆட்சிப் பீடம் ஏறும் பேரினவாதக் கட்சிகள் விடுதலைப் புலிகளின் பலம் உணராமல் எப்படியும் புலிகளை அழித்தொழிக்கலாமென்ற நப்பாசையில் செயற்பட்டன.

இந்நிலைமை விடுதலைப் புலிகளின் பலத்தை உயர்த்தியதோடு, தமிழ் மக்களிடையேபோராட்ட உணர்வையும் வளர்த்துவிட்டது.

விடுதலைப் புலிகள் மீது அரசிற்கும் அரசு மீது விடுதலைப் புலிகளுக்கும் நம்பகத் தன்மையில்லாத நிலையில் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதே பிரச்சினைக்குத் தீர்வு என்ற உண்மை உணரப்பட்டது.

இதன்படி நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் அரசும், புலிகளும் பேசும் வாய்ப்பு ஏற்பட்டது. நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் இம்முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டார்.

ஆனால், தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பாத அரசு எரிக்சோல் மீது சந்தேகம் கொண்டது.

இதனால் சமாதானம் ஏற்படக்கூடியநல்லதொரு சந்தர்ப்பம் கெட்டுப் போனது.

இதனைவிட விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக மேற்கொண்ட யுத்த நிறுத்தத்தை உதாசீனம் செய்தமை அரசுவிட்ட பெரும் மடமையாகும். இப்போது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்டம் காணும் இக்கட்டானநிலையில்புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளது. நான்கு மாதங்கள் ஒரு தலைப்பட்சமாக புலிகள் யுத்தநிறுத்தம் செய்தபோது புலிகள் பலமிழந்து விட்டனர் எனக் கூறிய அரசு இப்போது யுத்த நிறுத்தம் செய்து பேசலாம் எனக் கூறுவது வேடிக்கையானது.

தமிழர்களுக்கு இலங்கைக்குள் ஓர் தனியிடம் கிடைக்கவில்லையாயினும் இனிவரும் காலங்களில் இலங்கையில் எந்தக் கட்சிஆட்சிசெய்யவேண்டுமென்பதைத் தீர்மானிக்கும்சர்வவல்லமைபொருந்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவராக பிரபாகரனே இருப்பார்.

# ஊர்ச்சொத்துக்கு உலைவைத்த ஊடகம் ஒன்றே

# வலம்புரிக்கு கட்சிப் பெயர் சூட்டியது!

## கண்டிவீதி திறந்த எம்.பி சொல்வதெல்லாம் பொய்

யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை சங்கிலியன் படையின் பெயரில் வெளியான துண்டுப் பிரசுரம் யாழ்ப்பாணத்தில் வெளிவரும் வலம்புரிப் பத்திரிகையினால் வெளியிடப்பட்டது என பேரினவாதக் கட்சியின் எம்.பி. ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவி என்பது மிகமிகப் பெறுமதியானது. அப்பதவியின் பெறுமதியைக் காக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமுண்டு. ஆனால் மேற்படி பேரினவாதக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பொறுப்பற்ற முறையில் எந்தவித ஆராய்வோ, ஆதாரமோ இன்றி இலண்டனில் இருந்து ஒலிபரப்பப்படும் ஐ.பி.சி மற்றும் ரி.பி.சி வானொலிகளுக்குப் பேட்டி அளித்தார்.

அப்பேட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர்களை இராஜினாமாச் செய்யுமாறு சங்கிலியன் படையின் பெயரில் விடுக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தை வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியர்களே தயாரித்து வெளியிட்டார்கள் என்று கூறியுள்ளார். இக்கூற்றை உறுதிப்படுத்துவது போன்று அந்தப் பேரினவாதக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கடந்த 29ந்திகதி பத்திரிகையாளர் மாநாடொன்றைக் கூட்டியிருந்தார்.

### செய்தி ஊடக ஆசிரியர் வீட்டில் சந்திப்பு

இப் பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டுவதற்கு முன்னதாக, சங்கிலியன் படையின் துண்டுப்பிரசுரம் வெளியாகிய கடந்த 25ந் திகதி சனிக்கிழமை குறித்தஎம்.பி யாழ்ப்பாணத்தில் இயங்கும் செய்தி ஊடகமொன்றின் ஆசிரியர் ஒருவரின்வீட்டில் முற்பகல் 11.15 மணியளவில் சந்தித்தார். அச்சந்திப்பில் சங்கிலியன் படை வெளியிட்ட துண்டுப் பிரசுரம் பற்றி ஆராயப்பட்டது. இச்சந்திப்பு தருமருக்குப் பாரத ஆட்சி கிடைப்பதைத் தடுப்பதற்காகச், சகுனியின் தலைமையில், உரியென்றால் உரியும் துச்சாதனனுடன் ஆலோசனை நடத்தப்பட்டதற்கு ஒப்பாக இருந்தது.

இங்கு செய்தி ஊடகத்தின் ஆசிரியர் தரப்பில் இருக்கக் கூடிய சகுனி, சூழ்ச்சியிட்டார்.

அச்சூழ்ச்சியின் பிரகாரம், குறித்த செய்தி ஊடகம், சங்கிலியன் படையால வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தை பிரசுரிக்காமல் விடுவதென்றும், வலம்புரிப் பத்திரிகை அத்துண்டுப் பிரசுரத்தை வெளியிடுமாயின், அப்பத்திரிகையில் பழியைச் சுமத்தி பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்யாமல் தப்பவைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் சகுனியின் சூழ்ச்சியை செய்தி ஊடகங்களுக்கு அறிவிக்கும் பொறுப்பு செய்யென்றால் செய்யும் ஏதுமறியாத துச்சாதனனிடம் விடப்பட்டது. துச்சாதனனின் நிலையிலிருந்த குறித்த எம்.பியும் வலம்புரிப் பத்திரிகையில் அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

இத்தகைய குற்றச்சாட்டு வெளியானதும் முதலில் சந்தோசமடைந்தவர் வலம்புரியைக் கட்சிப் பெயர் சூட்டி எப்படியாவது கவிழ்த்து விட வேண்டுமெனக் காத்திருந்த சகுனியே,

### துச்சாதனனுக்கு பதிலடி

சங்கிலியன் படையின் துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டது வலம்புரியே எனக் கூறிய துச்சாதனன் எம்.பிக்கு நல்ல பதிலடியை ஆகஸ்ட் 28ந் திகதிய வலம்புரியில் கொடுத்திருந்தோம். இப்பதிலடி சகுனியின் சூழ்ச்சியைத் தவிடுபொடியாக்கியது. இதனால் கோபாவேஷம் கொண்ட சகுனி 'துச்சாதனா விடாதை பிடி. நடத்து பத்திரிகையாளர் மாநாடு, இந்தா மாநாட்டில் நீ வாசிக்க வேண்டிய பட்டோலை, துரியோதனனுக்கு மாமனாகிய நான் உனக்கும் மாமனன்றோ. கவலைப்படாதே' என்றுகூற துச்சாதனன் அடஎனக்குஎந்த கெடுதியோ அல்லதுஎன்னைப் பற்றி எந்தக்குறையோ ஒருகாலும் எழுதாத வலம்புரிக்கு எதிராக நான் ஏன்

# சகுனி சூழ்ச்சி செய்ய

# துச்சாதனன் துகில் உரிகிறான்

செயற்பட வேண்டுமென சற்றும் சிந்திக்காமல், நீதி தவறி மனச்சாட்சிக்கு விரோதமாக அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தினார்.

### முழுப்பக்கத்தில்வெளியாகியது

சூழ்ச்சி செய்துகொடுக்கப்பட்டதன் படி தயாரிக்கப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டு அறிக்கை, பத்திரிகையாளர் மாநாடு முடிவதற்கு முன்னதாகவே.குறித்த செய்தி நிறுவனத்தில் அச்சாகியது அதில் அதிசயம் என்னவெனில் குறித்த எம்.பியால் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்படாத விடயங்களும் சேர்க்கப்பட்டிருந்தது. தகவல் ஊடகம் ஒன்றோடு ஒன்று ஒற்றுமையாக இருக்கவேண்டிய நிலையில், அந்த ஊடக தர்மத்தை மீறி ஒரு முழுப்பக்கத்தில் அறிக்கையை குறித்த செய்தி ஊடகம் வெளியிட்டிருந்தது.

அதுமட்டுமன்றி குறித்த அறிக்கைக்கு எத்தனையோ வடிவங்களில் தலையங்கம் இடக்கூடியதாக இருந்த போதிலும் தனக்கிருந்த தனியுரிமையை உடைத்தெறிந்து சனிக்கிழமை தோறும் வெளிவரும் அதிரடியான மின்னல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தும, ஆபாசமான பதில்களுக்கு வாய்ப்பூட்டுப் போட்டும், சாதனைபடைத்த வலம்புரிக்கு கட்சிப் பெயர் சூட்டும் வகையில் **'ஆயுதக் குழுவினால் இயக்கப்படும் ஊடகம் ஒன்றே சங்கிலியன் படையின் பிரசுரத்துக்குப் பின்னணி'** எனத் தலையங்கம் இடப்பட்டது.

### ஈ.பி.டி.பிக்குநேரில்சென்று நன்றி தெரிவிப்பு

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடன் வலம்புரியை இணைத்துக் கூறும் மேற்படி செய்தி ஊடக ஆசிரியர், தனது ஆட்சிக்குட்பட்ட ஓர் அமைப்புக்கு நிதி பெறுவதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேரில் சென்று சந்தித்தார். 70 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டதும் மீண்டும் ஈ.பி.டி.பியின் யாழ் தலைமைச் செயலகத்திற்குச் சென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு கை கொடுத்து நன்றி தெரிவித்தார். எப்படியிருக்கிறது நாடகம். இதனை குறித்த பத்திரிகை ஆசிரியர் பகிரங்கமாக மறுப்பாரா?

### இராணுவ விமானத்தில் அடிக்கடி பயணம்

இராணுவ விமானத்தில் பயணம் செய்வதை விடுதலைப்புலிகள் அனுமதிக்கவில்லை. ஆனால் குறித்த செய்தி ஊடக ஆசிரியர் எந்தவிதமான பயண அனுமதியுமின்றி இராணுவ வாகனத்தில் சென்று இராணுவ விமானத்தில் பயணம் செய்தார். அப்படியானால் அவருக்கு படைத்தரப்பில் இருந்த செல்வாக்குஎத்தகையது இது மட்டுமல்ல அண்மையில் பிரபல கல்லூரி ஒன்றில் நடந்த விளையாட்டுப் போட்டிக்கு அந்த ஆசிரியர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காககொழும்பில்இருந்த அவரது குடும்பத்தினர் எடுத்த பயண அனுமதிப்பத்திர இலக்கம் என்ன? கூறமுடியுமா? இல்லவே இல்லை. ஐயா, அப்படியானால் இராணுவத் தரப்பில் அந்த மகானுக்கு இருந்த செல்வாக்கு எத்தகையது? அந்தச் செல்வாக்கைப் பாதுகாக்க அவர் செய்யக்கூடிய பரிகாரம் என்ன தெரியுமா? விடுதலைப் புலிகளுக்குள் முரண்பாடு என்ற பொய்யான செய்தியைத் தனது பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும். அதற்காகக் கொக்குவில் இந்துக்கல்லூரியில் படிப்பிக்கும் பத்திரிகை ஆசிரியர் 'சங்கிலியன் படையின் துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டவர்கள் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்குக் கீழுள்ளவர்கள் தான். தமிழ்ச்செல்வனுக்கும் அன்ரன் பாலசிங்கத்திற்கும் இடையில் கொழுவல் அதுதான் அன்ரன் பாலசிங்கம் மறுத்துள்ளார்' எனக்கூறியதாக பிரசுரித்தார்.

இதன்மூலம் இரு நன்மைகளை அவர் பெற முனைந்துள்ளார். அதில் ஒன்று, குறித்த ஆசிரியரை பிழையானவராக புலிகளுக்குக் காட்டிக் கொள்ளுதல் இரண்டாவது படைத்தரப்பிற்கு மறைமுகமாக உதவுதல்.

பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்படி செய்தியை பொறுப்பற்ற முறையில் எம்.பி தெரிவித்திருந்தாலும் பொய்யான செய்தியை பிரசுரிக்காது தவிர்ப்பது ஒரு தமிழ்ப் பத்திரிகையின் கடமை, எனவே இது விடயத்தில் உண்மை நிலையை அறிந்து கொள்ள மேற்படி செய்தி தொடர்பாக விடுதலைப்புலிகள் விசாரணை நடத்த வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

### பாலசிங்கத்தின் மறுப்பு

சங்கிலியன் படைக்கும் தமக்கும் தொடர்பில்லை என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த செய்தியை வலம்புரி ஏன் பிரசுரிக்கவில்லை என மேற்படி எம்.பி கேள்வி எழுப்பியிருந்தாராம். ஐயா கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் மறுப்புச் செய்தி ஒரு குறித்த செய்தி ஊடகத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டது. அச்செய்தியின் உண்மைத்தன்மையும், ஆதாரமும் அச்செய்தி ஸ்தாபனத்திடமே இருக்கும். அந்நிலையில் ஒரு பத்திரிகைக்குத் தெரிவித்த மறுப்பை இன்னொரு பத்திரிகை பிரசுரிக்க முடியாதல்லவா? அவ்வாறு பிரசுரிப்பதாயின் அம்மறுப்புச்செய்தி விடுதலை புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான புலிகளின் குரலில் வெளியாகியிருக்க வேண்டும். அவ்வாறுவெளியாகாவிடில் எந்தப்பத்திரிகைக்கு செய்தி வழங்கப்பட்டதோ அந்தப்பத்திரிகைக்கு மட்டுமே அச்செய்தி சொந்தமானதாகும்.

### தலைவரின் செய்திக்கு தணிக்கையா

தலைவரின் மாவீரர் தினச் செய்தியை வலம்புரி தணிக்கை செய்ததாக எம்.பிகுறிப்பிட்டுள்ளார். இரவு ஒன்பது மணிக்குப் பின்னர் கிடைத்த தலைவரின் உரையை அப்படியே பிரசுரிக்காமல் போனதற்கு வலம்புரியிலுள்ள சில தொழில் நுட்ப வசதியீனங்களே காரணமாகும். அவ்வசதியீனங்களையே எதிராகத் திருப்பும் துரோகத்தனம் சாதாரணமனிதநேயம் உள்ள மனிதர்களிடம் கூட இருக்காது, இருக்கவும் கூடாது. இதைவிட குறித்த எம்பியால்கூறப்பட்ட ஏனைய விடயங்கள் யாவும் அரசியல் வாதியின் இயல்புக்குரியவை என்பதால் அவற்றுக்கு விளக்கம் கொடுத்து வாசகர்களின் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை,

### இறுதியாக

ஒரு பத்திரிகைக் கெதிராக ஒருமுழுப்பக்கத்தில் அறிக்கை வெளியிடப் பட்ட ஒருசெய்தியூடகத்தின் போக்கை இனி வாசகர்களேகணித்துக்கொள்வர் ஆயினும் ஓர் பாராளுமன்ற உறுப்பினர் பொறுப்புடன் நடந்து கொள்வதும் பிறரின் சதி வலைக்குள் விழாது தன்னைப் பாதுகாத்துக் கொள்வதும் மிகமிக முக்கியம் என்பதுடன் கண்டி வீதி திறந்தது போலல்லாது, சங்கிலியன் படையின் துண்டுப் பிரசுரத்தை வலம்புரி பிரசுரித்ததற்கான ஆதாரங்களை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறோம். ★

**த. வி. கூ இளை அமைப்பு கூட்டம்**

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதேசகிளைஅமைப்புக் கூட்டம் இன்றுபி.ப2.30 மணிக்குதெல்லிப்பழை காசிப்பிள்ளையார் ஆலயம் அருகாமையில் இடம்பெறவுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவைசேனாதிராஜா சிசிவமகாராசா ஆகியோரேகூட்டத்தில்சிறப்புரை ஆற்றவுள்ளனர். (உ)

# எந்த விடயத்தையும் நன்கு ஆராய்ந்து செயற்படுவதுதமிழ்க்கட்சிதலைவர்களின்கடமை

## சங்கிலியன்படையின் பிரசுரம் தொடர்பாக அடைக்கலநாதன்எம்.பி

(கொழும்பு)

பொது ஜனஐக்கிய முன்னணி அரசினை வீழ்த்துவது என்ற நோக்கில் தான் நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். யுத்தநிறுத்தம்செய்து புலிகளுடன் பேசலாம் என்ற புதியதொருவித்தையை எமக்குக் காட்டியுள்ளார்கள் பெரும்பான்மையை இழந்த நிலையில் ஜனாதிபதி ஆட்சியைநீடிப்பார் என்று நான் கருதவில்லை என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்ரெலோஅமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் ரி.பி.சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ரி. பி. சியின் புதியபார்வை நிகழ்ச்சிக்கு அடைக்கலநாதன் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

விடுதலைப்புலிகளைப் பேச்சுக்கு அழைப்பதன் மூலம் தமது ஆட்சியைத் தக்கவைக்துக் கொள்வதற்கான அறிகுறியை அரசு வெளிப்படுத்தியுள்ளது. தமிழ்க்கட்சிபாராளுமன்ற உறுப்பினர்களை தம்பக்கம் இழுப்பதற்காகவே யுத்த நிறுத்தம் செய்து புலிகளுடன் பேச வேண்டுமென்று தற்போது கூறிவருகிறது.

சங்கிலியன் படை என்ற பெயரில் வெளியான கடிதம் உண்மையானதா, பொய்யானதா? என்று அறியாமல்ஆராயாமல் தங்களுடைய கருத்துக்களை வெளிபிலேகூறுவது என்னைப் பொறுத்தவரையில் ஏற்புடையதல்ல தமிழ்த் தலைவர்களைப் பொறுத்தவரையில் எந்த விடயத்தையும் நன்கு ஆராய்ந்து செயற்பட வேண்டுமென்று அவர்களிடம் கூறிக்கொள்ள விரும்புகிறேன் இந்த விடயத்தில் நாம் அவசரப்பட்டு விட்டோம் என்றுதான் நான் நினைக்கிறேன் என்று செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (ம)

# மரண அறிவித்தல்

## கந்தர் விசுவநாதர்

[புலோப்பளை கிராமசபை முன்னாள் உறுப்பினர்]

இடைக்குறிச்சி வரணியைப் பிறப்பிடமாகவும் பேராலை பளையை வதிவிடமாகவும் 16/5 சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தர் விசுவநாதர் 30-08-2001 ல் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக்கணவரும், இராசம்மா, கனகம்மா, சோதிமலர், சரஸ்வதிபிள்ளை, சறோயினிதேவி (இலண்டன்), ராதிகா (கொலன்ட்), ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்ற கனகராசா (நீர்ப்பாசன ஓவசியர்), சந்திரலிங்கம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், R D A), சுந்தரமூர்த்தி (வவுனியா), சர்வானந்தராசா (விவசாயக் கந்தோர் கிளிநொச்சி), ஆரியதாஸ் (இலண்டன்), காலஞ்சென்ற விஜயராசா, ஆகியோரின் மாமனாரும், தம்பிமுத்து அரம்பிள்ளை (ஆசிரியர், பளை)யின் அன்புமைத்துனரும், ராஜரட்சன் (கனடா), கோகுலராசன் (இலண்டன்), ஸ்ரீகஜன் வீரகேசரி பத்திரிகையாளர், கொழும்பு)), ஸ்ரீதகசன் இலண்டன்), ஸ்ரீறேபன் (இலண்டன்), ஸ்ரீபிரியா, ஸ்ரீநிமல் (கணிதப்பிரிவு யாழ். இந்துக்கல்லூரி), ஸ்ரீஜனனி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), பிரசண்ணா (இலண்டன்), சர்வாஜினி (கொழும்பு), தாரணி (இலண்டன்), டிலானி, ஐரூபன், தர்சன், ரதீஸ் (கொலன்ட்), ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் தற்காலீக இல்லத்தில் 01-09-2001 பிற்பகல் 3 . 30 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

16/5 சீனியர் லேன்,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

திருமதி இராசம்மா
திருமதி கனகம்மா
திருமதி சரஸ்வதிபிள்ளை
(மக்கள்)

[கி/2444]

**வானத்தில்**

கள் விமான நிலையத்தை தாக்க வந்துள்ளனர் என அஞ்சி தாக்குதலுக்கு தயாராகினர்.

இது தொடர்பாகஉயரதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து அது ஒரு பட்டம் என இனம் காணப்பட்டது

இப்பட்டத்தை தகல்கிசைக் கடற்கரையில் இருந்து ஏற்றியதாக கூறப்படும் இளைஞர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ந-4)

**இனப்!-:**

புதுடில்லி பயணமானார்கள்.

இம்மாநாட்டில் இந்திய இலங்கை உறவுகள் தொடர்பாக ஆராயப்படுவதுடன் தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள ஆய்வறிக்கையும் சமர்ப்பிக்கவுள்ளனர். (வ)

**இலங்கையிலுள்ள**

இலங்கையில உள்ள அரசியல் கட்சிகளிடையே நான் மத்தியஸ்தம் வகிக்கவில்லை அப்படிக் கூறுவதை மறுக்கிறேன். கட்டுநாயக்கா விமானத் தளம் தாக்கப்பட்டதை அடுத்து இருந்த நிலைமை தற்போது மாறி வருகிறது. இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வர்த்தக சம்மேளனம் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது என்றும் தெரிவித்தார். (வ)

## வீடியோ படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகும் திரைப்படவட்டமும் இணைந்து வழங்கிவரும்திரைப்படக் காட்சித்தொடரில் கே பாரதிராஜாவின் முதல் மரியாதை எனும் திரைப்படம் இன்று சனிக்கிழமை காலை10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது ஆர்வலர்கள்எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று புறநிலைப்படிப்புக்கள அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (செ)

**கிரிகெட்**

பமாகும்மொத்தம்52 அணிகள் கலந்து கொள்ளும் இச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் 16 ந் திகதி ஞாயிறு மாலை 4.00 மணிக்கு நடைபெறும். (ந 4)

**மீட்கப்பட்டதந்தம்**

மாத்தளை ஹரங்ஹபர பகுதியில் இளைஞர் ஒருவரிடமிருந்து 5லட்சரூபா பெறுமதியான இரண்டு யானைத்தந்தங்களை மாத்தளைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இளைஞனைக் கைதுசெய்து விசாரணைக் குட்படுத்திய போது கடந்த5மாதங்களிற்கு முன்னர்சுட்டுக்கொல்லப்பட்ட யானையின் உடலையும் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். (ந5)

**அரசு...**

பை ரத்துச் செய்தல், அமைச்சுகளின் எண்ணிக்கையைக் குறைத்தல் ஆகிய கோரிக்கைகளை முன வைத்தே இந்தப் பேச்சுவார்த்தை இடம் பெற்றது.

மேற்படி கோரிக்கைகளை நிறைவேற்றினால் தகுதி காண் அரசிற்கு ஆதரவுவழங்குவோம் என்று ஜே. வி. பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல்3மணிக்கு இடம் பெற்ற முதல் சுற்றுப் பேச்சிலும் 5மணிக்கு ஆரம்பமான இரண்டாம சுற்றுப் பேச்சிலும அரசுக்கும் ஜே. வி பிக்குமிடையே சுமுகமான நிலை ஒன்று தென்பட்ட போதும ஐந்து ஆணைக்குழு அமைப்பது தொடர்பாக இன்னமும இருசாராரிடமும் புரிந்துணர்வு ஏற்பட வில்லை என்றும் அதில் தொடர்ந்தும் இழுபறி நிலை தென்படுவதாலும மூன்றாவது சுற்றுப் பேச்சு இரவு 8 30மணிமுதல் இச் செய்தி எழுதும் வரை (நள்ளிரவுவரை) நீடித்தது எனினும் முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை என்று ஜே. வி. பியின் பிரசார செய



இன்று (01-09-2001) தேரேறி உலாவரும் கொக்குவில் மேற்கு மஞ்சவண்ணப்பதி முருகப் பெருமானின் அருள் அனைவரும் பெற்றிட வாழ்த்தி, வணங்கி நிற்கின்றனர்.



வாழ்த்தி, வணங்கி நிற்கின்றனர்.

**மகாநதி ஜுவல்லறி ஸ்தாபனத்தார்**

**கலை நயம் மிக்க அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு**

# மகாநதி ஜுவல்லறி

**72A, கஸ்தூரியார் வீதி, - - - - யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்; S. K. S. மைந்தர்கள்

(கி-2443)


(நள்ளிரவுவரை) நீடித்தது எனினும் முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை என்று ஜே. வி. பியின் பிரசார செயலா விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க அரசிற்கும் ஜே. வி. பிக்கும் இடையே இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தையில் ஒருசில விடயங்களில் முட்டுக்கட்டைநிலை ஏற்படாது விட்டால தத்துதிகள் அரசு அமைப்பதில அரசு வெற்றியீட்டியதாகவே கருதப்பட வேண்டும.

ஜே வி. பிக்கும் அரசுக்கும் இடையே இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின போது முடிவு எதுவும் எட்டப்படவில்லை என்றும் தெரிவிக்கப் படுகிறது. (வ)


உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள, தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்



# நியூ நகுலா ஜுவல்லறி

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**நியூலலிதாஸ் ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(கி-219-)

**நகுலா நகைமாடம்**

241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.